அழுகைக்குக் குரலில்லை

மொழியாக்கக் கவிதைகள்

தமிழில்

ஷரீனா அப்துல் ஹக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகைக்குக் குரலில்லை

மொழியாக்கக் கவிதைகள்

தமிழில்

லறீனா அப்துல் ஹக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகைக்குக் குரலில்லை (மொழியாக்கக் கவிதைகள்)

லறீனா அப்துல் ஹக் ©

முதல் பதிப்பு: நவம்பர், 2021

புத்தக வடிவமைப்பு: ஆர்.பிரகாஷ்

புது எழுத்து

2/203, அண்ணா நகர்,

காவேரிபட்டிணம் - 635 112

கிருஷ்ணகிரி மாவட்டம்.

செல்: +91 63742 30985

Azhuhaikku Kuralillai (Translated Poems)

Lareena Abdul Haq ©

Pudhuezuthu

2/203, Anna Nagar, Kaveripattinam,
Krishnagiri District, 635 112.
Ph: +91 63742 30985.
muruguarch@gmail.com

Price: Rs. 120

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட மௌனமான தெருவில் நடக்கும் சொற்கள்

இந்த மொழியாக்கக் கவிதைத் தொகுதிக்காக உலகின் பல நாடுகளிலும் இருந்து மனிதநேயம், அரசியல், பெண்ணியம் முதலான பல்வேறு பாடுபொருள் சார்ந்த 35 கவிதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 21 கவிதைகள் சிங்கள மொழியில் இருந்தும் 14 கவிதைகள் ஆங்கில மொழியிலிருந்தும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. இதில் 12 கவிதாயினிகள், 10 கவிஞர்களின் கவிதைகள் இணைக்கப்பட்டுள்ளன.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள சிங்களக் கவிஞர்களின் அனேகமான கவிதைகள் இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்தகால இனமுரண்பாட்டு யுத்தத்தின் அவலங்களையும், குறிப்பாக தமிழ் மக்களின் துயரங்களையும் மிகுந்த உணர்வுத் தோழமையுடனும் மனிதநேயத்துடனும் பதிவு செய்திருப்பதைக் காணலாம்.

மேலும், இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள குமாரி குமாரகமகே மற்றும் அமீரி பரக்கா ஆகியோரின் இரு கவிதைகள் prose poem வகையைச் சேர்ந்தவை ஆகும். யுத்தத்தின் அவலங்களைக் குமாரியுடையதும், அமெரிக்காவின் அடாவடித்தனங்களை அமீரியுடையதும் கவிதைகள் உணர்வுபூர்வமாகப் பேசுகின்றன.

இந்நூலில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள ஜிஹான் உமர், மரியம் ஆலா அம்ஜாதி போன்ற சுதந்திரப் பெண்ணியவாதிகளின் கவிதைகள், பெண்மையின் கொண்டாட்டத்தையும் ஒடுக்குமுறைக்கு எதிரான கலகக் குரலையும் எதிரொலித்து இருப்பதைக் காணலாம்.

இத்தொகுதிக்கான தலைப்புக் கவிதையை எழுதிய நாதியா அஞ்சுமன் சுதந்திரத்திற்காக ஏங்கிய ஓர் இஸ்லாமியக் கவிதாயினி ஆவார். தனது நாட்டில் நிலவிய அதிகார ஒடுக்குமுறைக்கு எதிரான குரலைப் பதிவு செய்ததால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக ஆப்கானியப் பெண்களின் துயரங்களைத் தனது கஸல் வடிவக் கவிதைகள் வாயிலாக வெளிப்படுத்தியதால் அவர் மரணத்தைத் தழுவ நேரிட்டது. எனின், உலகின் ஏனைய பிராந்தியங்களில் உள்ள கவிதாயினிகள் எத்தனை சுதந்திரமாகப் பேசுகிறார்கள் என்பதையும், அதற்காக அவர்கள் கொல்லப்படவில்லை என்பதையும் நாம் கவனங்கொள்ள வேண்டும். தமது மன உணர்வுகளை, ஆதங்கங்களை வார்த்தைகளால் வெளிப்படுத்துவதுகூட படுகொலை செய்யப்படுமளவு கொடுங்குற்றமாக இருக்குமானால், அவ்விதம் எண்ணும், செயற்படும் நபர்களை நாகரிக சமூகத்தைச் சேர்ந்தோர் என்று எவ்வாறு கருதுவது என்ற கேள்வி இங்கு முக்கியமானது. பொதுச் சமூகவெளியில் செயற்படும், எழுதும், கருத்தாடல் நிகழ்த்தும் பெண்களை ஒடுக்குவதற்கான எல்லாவித முயற்சிகளிலும் ஈடுபடுகின்ற, அவதூறுகளைக் கட்டவிழ்த்துவிடும் இழிந்த போக்கினை நாம் இதனோடுதான் ஒப்புநோக்கிப் பார்க்கவேண்டி இருக்கிறது. அதுவும் ஒருவகைத் தாலிபானிய மனோநிலைதான் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது.

தம்மீது கட்டவிழ்த்துவிடப்படும் அனைத்துவிதமான அடக்குமுறைகளையும் தாண்டிப் பல பெண் குரல்கள் வீரியமாய் மேலெழவே செய்கின்றன என்பதை இத்தொகுதியில் உள்ள பல கவிதை வரிகளினூடே நாம் தரிசிக்கலாம். அவ்வகையில், ஆண்கள் வீட்டுக்கு வெளியே உள்ள அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும்போது, அவர்களின் காலம் வீட்டுக்கு வெளியே கழியும்போது, ஒரு பெண் தனது சமையலறையில் செய்யும் அனைத்து வேலைகளும் அதற்கு நிகரானவைதான் என்ற புதிய குரலை முன்வைக்கும் பெண் கவியையும், கௌரவக் கொலையை எதிர்க்கும் கவிதையினூடாகச் சமூக, கலாசார வன்முறைகளைக் கட்டுடைக்கின்ற, அவற்றைக் கேலி செய்கின்ற, அவற்றுக்கு அடிபணிந்து போகாது விலகிச் செல்லும் துணிச்சலை வெளிப்படுத்தும் கவிதைக் குரல்களையும் இங்கே நாம் செவிகூர்கின்றோம்.

அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அதிகார ஒடுக்குமுறைகளுக்கு முகங்கொடுக்கும் சக இனத்தவர்களுக்கான இரங்கலுணர்வையும், உணர்வுத் தோழமையையும் அநீதிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான விமர்சனக் குரலையும் வெளிக்காட்டும் பல கவிதைகள், குறிப்பாகப் பெண்களின் கவிதைகள் இத்தொகுதியில் உள்ளன. அவ்வாறே, இத்தொகுதியில் உள்ள அலி ஸாதேயின் கவிதை இஸ்லாமோஃபோபியாவினால் சாதாரணமான ஒரு முஸ்லிம் எப்படி, அரசுகளாலும், அதிகார நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றான், எப்படியெல்லாம் அதிகாரத் தரப்பின் தேவைகளுக்கேற்ப முத்திரை குத்தப்படுகின்றான் என்பதை வலியோடும் எள்ளலோடும் முன்வைத்திருப்பதையும் நாம் காணலாம்.

ஆக மொத்தத்தில் சகலவிதமான மானிட ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான மனிதத்துவத்தின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்யும் குரல்களின் இழைகளைச் சேர்த்து நெய்யப்பட்டிருக்கும் இத்தொகுதியில் உள்ள மொழியாக்கக் கவிதைகளில் சில ஏலவே உன்னதம், மனமோகி, ஊடறு, தாய்வீடு, நடு, மறுத்தோடி, மணற்கேணி, காலச்சுவடு முதலான இதழ்கள் மற்றும் இணைய இதழ்களில் வெளிவந்துள்ளன. அவற்றின் ஆசிரியர்களுக்கும் மொழியாக்கத்துக்காக சில கவிதைகளைத் தந்துதவிய கவிஞரும் இலக்கியச் செயற்பாட்டாளருமான தோழர் றியாஸ் குரானாவுக்கும், சிங்களக் கவிதைகளில் சிலபோது எழுந்த ஐயங்களைச் சிரமம் பாராமல் தீர்த்து வைத்த மதிப்புக்குரிய தோழர் ஜி.ஜி. சரத் ஆனந்த அவர்களுக்கும் என் மனமார்ந்த அன்பு. கவிதைகளைப் பெற உதவிய விகல்ப, பூன்தி உள்ளிட்ட இணைய தளங்களுக்கும் நன்றிகள்.

மேலும், இத்தொகுதியைப் பதிப்பிக்கும் பொறுப்பினைப் பெருமனதோடு ஏற்ற அருமைச் சகோதரர் புதுவெழுத்து மனோன்மணி அவர்களுக்கும், தமக்கான நேரத்தில் ஒரு பகுதியை என் எழுத்துப் பணிகளுக்காக அர்ப்பணிக்க நேர்ந்ததைப் பொறுத்துக்கொண்ட, உடனிருந்து உதவிகள் பல செய்த என் கண்ணின் கருமணிகள் ராஷித், நதா இருவருக்கும் என் அன்பும் மனங்கனிந்த பிரார்த்தனைகளும்.

மிக்க அன்புடன்,

லறீனா அப்துல் ஹக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரானா அல் துன்ஸி (Rana Al Tonsi)

1981 ஆம் ஆண்டு கெய்ரோவில் பிறந்த கவிதாயினி ரானா கெய்ரோவில் உள்ள அமெரிக்கன் பல்கலைக்கழகத்தில் அரபுக் கற்கைகளுக்கான துறையில் தனது பட்டப்படிப்பினை நிறைவுசெய்தார். தற்போது கெய்ரோவில் உள்ள பிரித்தானியப் பாடசாலையில் கற்பித்து வருகிறார். இவர் இதுவரை மூன்று கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். That House from which the Music Comes *(கெய்ரோ, 1999)*, A Rose for the Last Days *(மெரிட், கெய்ரோ 2003)*, A Country Called Desire *(மெரிட், கெய்ரோ 2005)* என்பனவே அவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதித் தினங்களுக்கான ஒற்றை ரோஜா

அவமானப்படுத்தப்பட்ட யாசகனைப் போல
ஒற்றைக் காலுடன் நொண்டுகிறேன்
திறந்து மூடும் அரைக்-கதவுகளை
கொடிக்கம்பங்களில் இருந்து கீழிறக்கப்பட்ட
கொடிகளைத் தாண்டி...
நடைபாதை எப்போதுமே
எனக்கானதாய் இருந்ததில்லை
என்றாலும்
கசப்பும் கடுமையும் நிறைந்த
அழுகை தோய்ந்த பொழுதுகளில்
அது என்னை அரவணைத்துக் கொண்டது.

எனது நாட்டில்
சிப்பாய்கள் போருக்குச் செல்கின்றனர்
அவர்கள் ஒருபோதுமே போரிட்டதில்லை.
ஒவ்வொரு காப்பிக்கடையிலும் சதுக்கத்திலும்
நோயாளியின், துயருழந்தோரின், பித்தர்களின் காலடியில்
தாதியரின் கனிவுக்காய் எறியப்பட்ட
ஒரு ரோசாவின் தடயத்தைச் சட்டெனக் காணலாம்
புலம்பல்கள் நிறைந்திருக்கும் தனித்த அறைகளில்
ஒரு ரோசா இரத்தத்தில் தோய்ந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கார் இன்னும் நிறுத்தப்பட்டிருக்காது
என்றுதான் நம்புகிறேன்
ஒரு வீறிடலைப் போல
அதிலிருந்துதான் நான் விழுந்தேன்
எனக்குத் தெரியும்
மின்தூக்கி இயக்குபவன்
வேலிக்கு மேலால் பாயவேமாட்டான்
நான் நெடுநேரமாய்ச் சுற்றியலைந்திருந்த போதிலும்
அந்தக் கற்பாறைகள் என்னைக்
காயப்படுத்தியவண்ணமே இருந்தன

ஒற்றைப் பாதத்துடன்
மரணம் வரும்
தன் தலையுயர்த்திப் பார்க்கும்
அதை எதிர்கொண்டு, இம்மனிதனை இறுகத்தழுவுவேன்
அவன் கரங்களில் என்
எல்லாக் கவிதைகளையும் திரட்டிக் கொடுப்பேன்
அவனின் உஷ்ண மூச்சுக்களினிடையே
என் எலும்புகளை நொறுக்குவேன்
என் நுரையீரல்கள் இரு குழாய்களாகும்
என் பாதங்கள் ஒரு போர்க்களம்
என் இதயம் ஒரு தூக்குக்கயிறு
நான் உண்மையில் செத்திருக்கிறேனா?
சற்று நேரத்துக்கு முன்னர்தான்
நான் தாய்நாட்டின் வாசனையை முகர்ந்திருந்தேன்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்கள்கூட கடக்க அஞ்சும்
வெறுமையான அத்தெருக்களை
வெறுங்கரங்களுடன் நீ கடப்பாய்
உனக்குத் துணையாய் வராத உன் நிழலோடும்
மிகக் கனக்குமொரு காதலோடும்
நீ பேசுவாய்
உன் பெற்றோரைப் பற்றி
திடீர்ச் சாவு தரும் அதிர்ச்சியைப் பற்றி
தனிமையை ஒருபோதும் குறைத்திடாத
மின்விளக்கு ஒளிர்கையில்
என் விழிகள் நிறைகின்றன
உன் முன்னால் நிற்கையில்
என் காற்சட்டை ஈரலிக்கிறது

நீயொரு செய்திப் பத்திரிகையை
உன் மார்பின் மேலிருந்து எடுப்பாய்
உன் கண்களில் இருந்து
ஒரு கண்ணாடியையும்தான்
நான் அவற்றைப் பார்க்கலாம்
இப்போது நான் வெளியில் போகலாம் என்பதை
அதிலிருந்து உணரலாம்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுக் கிராமங்களையும் மூழ்கடித்த
ஒரு பழைய வெள்ளம் தோற்றுவித்த
சதுப்புநிலங்களில் ஒன்றில்
கருணைக் கொலைக்காய்க் காத்திருக்கும்
முறிந்த சிறகுள்ள
ஒரு பறவையைப் போல் நான் பாய்வேன்

கோழியைப் போன்ற பின்புறத்தை விரும்பும்
ஒரு பறவையால்
தொடர்ந்தும் பறக்க முடிவதில்லை
துப்பவும்தான்.
ஒவ்வொரு தடவையும் அவன் ஏறுவதைப் போல
அவன் விழிகள்
உறங்குகையில் மூடிக்கொள்வதுமில்லை
ஒரு துளிக் கண்ணீரைச் சிந்துவதுமில்லை
ஆனால், எல்லாப் பறவைகளும் உடன்பட்டே உள்ளன
இப்போதோ இனி எப்போதுமோ
அவனால் சுடப்படுவதற்கு
அவன் சுடுவது தன் களிப்பின் பொருட்டா, வலியினாலா
என்பதைப் பற்றி யாருக்கும்
சரியாகத் தெரியாது.
அவனைப் போன்ற ஒரு துயரப் பறவையால்
ஒரு நீண்ட இருளைப் பற்றிக்
கனவு காண மட்டுமே இயலும்
●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மரணத்தை நான் நினைக்கும்
ஒவ்வொரு முறையும்
யாரேனும் ஒருவர் இறக்கின்றார்
கவிதைகள் தாமே
எழுதிக்கொண்டிருக்கின்றன
●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எவரையும் தழுவவில்லை
என் காலடிகள் நானின்றியே கடந்துசெல்கின்றன
வீட்டின் கை என்னை எரிக்கிறது
என் வரலாற்றில் உறங்கும் நபர்
ஒருபோதும் எழுந்திருப்பதேயில்லை
இரவில் அவன் காலடிகள்
என்னை அழுத்துகின்றன
காலையில் அவன் மார்பின் மேல்
பயத்தோடு எழுகிறேன்
அவன் என்னிடம் சொல்கிறான்,
'நான் முன்பிருந்த நானல்ல' என்று.

அவன் சிகரட் புகைக்கிறான்
போரிலிருந்து திரும்பியவனைப் போல
அதனால் பாதிப்புற்றவர்களின் சரியான எண்ணிக்கை பற்றி
அவனறிவான்
களவாகப் பார்த்த பார்வைகளுக்கும்
அவனின் சுவாச ஒலிக்கும்
இடையில் நான்,
அவனிடமிருந்து தொலைந்த
ஒரு கடிதம் பற்றி அறிவேன்.

என் மரணத்தை நான் நினைக்கும்
ஒவ்வொரு முறையும்
யாரேனும் ஒருவர் இறக்கின்றார்
கவிதைகள் தாமே (தானாகவே)
எழுதிக்கொண்டிருக்கின்றன

●

ஆங்கிலத்தில்: சினான் அந்தூன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலி அலிஸாதே (Ali Alizadeh)

1976 இல் ஈரானியத் தலைநகர் தெஹ்ரானில் பிறந்தவர். சிறுவயது முதலே இலக்கியத்திலும் புத்தக வாசிப்பிலும் பெரும் ஈர்ப்பு கொண்டிருந்தார். தனது 13 ஆம் வயதில் ஷாஹ் நமேஹ் எனும் படைப்புக்காக இளம் படைப்பாளருக்கான இலக்கிய விருதினை வென்றவர். ஈரான் — ஈராக் யுத்தம் உக்கிரமடைந்திருந்த போது அவர் தன் குடும்பத்தோடு அவுஸ்திரேலியாவின் குவின்ஸ்லாந்துக்கு இடம்பெயர நேர்ந்தது. முற்றிலும் அந்நியமான சூழமைவு, வகுப்புத் தோழர்களின் இனத்துவேஷப் புறக்கணிப்புகள், ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்வதில் உள்ள சிரமம் எனும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் 1995 ஆம் ஆண்டு ஆக்க இலக்கியத் துறையில் கற்கையை நிறைவு செய்தார். பிற்காலத்தில் Griffith பல்கலைக்கழகத்தில் ஆக்க இலக்கியத் துறை சிறப்புக் கற்கைக்கான பட்டம் பெற்றார். புதிய பரீட்சார்த்த முயற்சியாக 'rhizomic' வகைக் கவிதைகளைப் புனைந்து, அந்நூலுக்கு elixir - கவிதையின் கதை எனப் பெயரிட்டார். அதுவே அவரது முதலாவது நூலாகும்.

பின்னர் அவர் மெல்பேர்னில் உள்ள Deakin பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டக் கற்கையை 2004 இல் நிறைவு செய்தார். கவிதைக்கான பல்வேறு இலக்கிய விருதுகளைப் பெற்றிருக்கும் அலி, ஏராளமான நூல்களை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிக்கு,
பயங்கரவாதி

என்னைக் காட்டுமிராண்டி என்கிறீர்கள்.
நானோ உங்களைத் தலைவர் என்றழைக்கிறேன்.

என் மொழியை நீங்கள் பேசுவதில்லை
உங்கள் செவிகளுக்கு இரைச்சலாய் இருக்கிறது
என் பேச்சு.

என் கவிதைகள்
பொருளற்ற வெற்று ஓசைகள் உங்களுக்கு.
உங்கள் கவிதைகளோ இலக்கியத்தின் உன்னதப் படைப்பு

உங்கள் ஆடைகள் 'ஃபெஷ'னையும்
உங்கள் வீடுகளே கட்டிடக் கலையையும்
உருவாக்குகின்றன.

என் வீடு
உங்கள் 'டாங்கி'கள் மட்டப்படுத்திய நிலத்தில்
சிறுகுடிலாய் எழுந்து நிற்கின்றது;
என் ஆடைகளோ வெறும் கந்தல்.

எனது நம்பிக்கைகளை
உங்கள் தொழினுட்பம் நசித்துப் போட்டிருக்கிறது
காரணம், நானொரு காட்டுமிராண்டி

என்றாலும், உங்கள் மொழியை
நான் விளங்கிக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ தலைவரே!
உங்கள் வார்த்தைகள்
எனது இருப்பின் இன்றியமையாமை.

புரியாத மொழிபேசும்
ஓர் அபாயகரமான அந்நியஜீவியாய்
ஒரு பிறவி மூர்க்கனாய்
என்னையே நான் பார்த்துக்கொள்ளவும்
நீங்கள் தரும் கண்ணாடியை
அணிந்துகொள்ள வேண்டியிருக்கிறது
காரணம்,
நீங்கள் மிகவும் நாகரிகமானவர், பொருளுடையவர்
உங்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றன
உங்கள் அதிகாரத்தின் தர்க்கத்தை
நிறுவுவதற்கான சாதனங்களும்கூட.

நீங்கள் ஆடைகள் அணிகிறீர்கள்
அவை சிப்பாய்கள் முன்னிலையில்
உங்களுக்கான கம்பீரத்தை
இன்னும் சற்று உயர்த்திக் காட்டும்.
நான்?
நானொரு நிர்வாணி

நீங்கள் அழகுநடை பயில்கையில்
அணிவகுத்து அழைத்துச் செல்லப்படும்
ஒரு கைதி நான்

நான் தோற்கடிக்கப்பட்டுள்ளேன்,
உரிமை பறிக்கப்பட்டுள்ளேன்
இப்போது
உங்கள் பெருநகரக் கூண்டுகளில்
அடைத்துவைக்கப்பட்டுள்ளேன்

எனக்கென்றொரு கலாசாரம்
எப்போதேனும் இருந்ததா என்பதை
என்னால் நினைவுகூரவே முடியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம், உங்கள் அதிகாரக்குரல்
என் ஞாபகங்களை மழுங்கடித்துவிட்டது
உங்களது நாகரிகத்தின் புண்ணியத்தில்
என்னைக் கற்காலவாசியாகவே
நிரூபித்துக் காட்டியது உங்கள் தர்க்கம்
ஆம், நான் புரிந்துகொள்கின்றேன்
உங்களின் மொழியை.

எனது இயலாமையின் அர்த்தப்பாட்டை
கம்பிகளுக்குப் பின்னால் இருந்தபடி
கற்றுக் கொண்டிருக்கிறேன்.

எனது அடிமைத்தனத்தின் நிபந்தனைகளை
எப்படி எழுத்துக் கூட்டுவது
எவ்விதம் உச்சரிப்பது என்பதெல்லாம்
இப்போது எனக்குத் தெரியும்.

உங்கள் சிறைப்படுத்தல்,
'பாதுகாப்பு' எனப்படும்
உங்கள் யுத்த முன்னெடுப்பே,
'சுதந்திரம்'
உங்களின் கொத்துக் குண்டுகள்
என் குழந்தைகளுக்கான 'உணவுப் பொட்டலங்கள்'

ஓ! தலைவரே!
நான் புரிந்துகொள்கிறேன்.
உங்கள் இழிந்த அடிமை
என்னவாக இருக்கவேண்டுமென்பதை
நான் உங்கள் காட்டுமிராண்டி, உங்கள் பயங்கரவாதி;
உங்கள் பிசாசு.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீரி பரக்கா (Amiri Baraka)

2002 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிவ் ஜேர்ஸி கவிஞர்கள் குழுமத்தின் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டவர் பரக்கா. கவிதையானது அதன் வாசகர்களுக்கு அழகியல் அனுபவத்தைக் கொடுப்பதை விட அவர்களைப் பிடித்து உலுக்க வேண்டும் என்பதே பரக்காவின் கவிதையியல் கோட்பாடாகும். விருது வழங்கும் விழாவுக்குச் சில வாரங்களின் பின்னர் 9/11 பற்றிய தனது கவிதையில் குறித்த பயங்கரவாதத் தாக்குதல் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் இஸ்ரேலியர்களும் முன்கூட்டியே அறிந்தே இருந்தனர் என்ற கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இவரது இக்கூற்றானது முன்னாள் நிவ் ஜேர்ஸியின் ஆளுநர் ஈ. மெக்ரீவி, அமெரிக்க சட்டசபை உறுப்பினர்கள், அவதூறுகளுக்கு எதிரான அமையம் உள்ளிட்ட ஒரு குறிப்பிட்ட வாசகர் பரப்பினரிடையே பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. செமிட்டிய எதிர்மனோபாவம் குறித்த குற்றச்சாட்டுகள் அவர்மீது சுமத்தப்பட்டன. கவிஞர்கள் குழுமத்தில் இருந்து பரக்கா ராஜினாமா செய்யவேண்டும் என ஆளுநரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அவர் அதற்கு மறுப்புத் தெரிவித்தபோது, அவருக்கு எதிராகக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பரக்காவுடன் நேரடியாக மோத முடியாத ஆளுநரும் சட்டசபை உறுப்பினர்களுமாய்ச் சேர்ந்து, நிவ் ஜேர்ஸி கவிஞர்கள் குழுமத்தில் அவரது உறுப்புரிமையை ரத்துச் செய்தனர். இது உண்மையில் பேச்சுரிமைக்கு எதிரான செயல்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமீரி பரக்கா சர்ச்சைகளுக்குப் புதியவரல்ல. உண்மையில், அவரது இலக்கிய வாழ்வு முழுவதிலும் அனேகமாக எல்லா மேடைகளிலுமே அப்படியான சர்ச்சைகள் மேற்கிளம்பக் காரணமாகவே இருந்துள்ளார். அவரது "Somebody Blew Up America" எனும் கவிதை ஏற்படுத்திய பெரும் சர்ச்சையானது அதன் மிகக் கனதியான உட்கருத்தைக் குவிமையப் படுத்துவதை விட்டும் மக்களைத் திசைதிருப்பக் கூடியதாகவும் இருந்தது என்பதையும் மறுப்பதற்கில்லை.

அது பற்றிக் குறிப்பிடும் ஊடகவியலாளர் ஹெரமி பியர்ஸ், "இக்கவிதையானது, வரலாறு முழுதும் ஒடுக்கப்பட்ட மக்களின் அவலங்களைப் பிரகடனப்படுத்துவதாக அமைந்துள்ளதோடு, உலகமெங்கிலும் இடம்பெற்று வரும் அரசியல் அடக்குமுறைகளுக்கு எல்லாம் யார் பொறுப்பு என்ற கேள்வியைத் திரும்பத் திரும்ப எழுப்பிக் கொண்டிருக்கிறது" என்கின்றார்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரேனும் அமெரிக்காவை எரியூட்டுங்கள்

அவர்கள் சொல்கிறார்கள்
யாரோ சில பயங்கரவாதிகள்
சில காட்டுமிராண்டிகள்
ஓர் ஆப்கானிய மதகுரு செய்ததுதான்,
நமது அமெரிக்கப் பயங்கரவாதிகள் செய்ததல்ல
குக்ளக்ஸ் க்ளான் கிளர்ச்சியாளர் செய்ததல்ல
நிறவெறியர் செய்ததல்ல என்கிறார்கள்.

நீக்ரோக்களின் தேவாலயங்களை எரியூட்டியவர்கள்
அல்லது நம்மைக் கடைந்தேற்றுவதற்கு
மரண வரிசையில் நிறுத்தியவர்கள் அல்லவாம்
அதனைச் செய்தது
ட்ரென்ட் லொட் அல்லது டேவிட் ட்யூக்
அல்லது குயிலியானி அன்றேல் ஸ்கன்ட்லர்கூட
அல்லவாம், ஹெல்ம்ஸ் ஓய்வுபெறுகிறார்.
அதைச் செய்தது
அவர்கள் அல்லதானாம்,

ஆடை போர்த்திய மேகநோயாளர்
கறுப்பரைக் காவுகொள்ளும்
தொற்றுநோய் பரப்பியோர்
நியாயத்தை, பிரக்ஞையுணர்வை
மானிடத்துவத்தின் முழுமையை
தம் மகிழ்வின் பொருட்டாய்
பீதியினுள் ஆழ்த்தியவர்கள் அல்லவாம்
அதனைச் செய்தவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சொல்கிறார்கள் (யார் சொல்கிறார்கள்?)

யார் அதைச் சொல்கிறார்கள்?

அவர்களுக்குச் செலவளிப்பவர்கள்
பொய் சொல்கிறவர்கள்
முகமூடியணிந்துள்ளவர்கள்
அடிமைகளை வைத்திருப்போர்
பணம்வாரிக் குவிப்பவர்கள்
பெருந்தோட்டங்களால் கொழுத்தவர்கள்
செவ்விந்தியரைப் படுகொலை செய்தோர்
கறுப்பின நிலத்தை நிர்மூலமாக்கியோர்
வோல் ஸ்ட்ரீட்டில் வசிப்போர் சொல்கிறார்கள்.

உன் தலையை மழுங்கடிப்பவர்கள்
உன் தாயை வன்புணர்பவர்கள்
உன் தந்தையை அநீதியாய்க் கொன்றவர்கள்
தார் எடுத்தவர்கள், இறகெடுத்தவர்கள்
தீப்பெட்டி வைத்திருப்போர்,
தீயைக் கொளுத்தியவர்கள்
கூலிக்கமர்த்திக் கொன்றவர்கள்
தம்மைக் கடவுளெனக் கூறிக்கொண்டு
சாத்தான்களாகவே இன்னும் இருப்பவர்கள்
சொல்கிறார்கள்.

தாமே பெரியவர்கள் என்போர்
தாமே மிகச் சிறந்தவர்கள் என்போர்
தாமே இயேசுவின் மறுவுரு என்போர்
தாமே அனைத்தையும் உருவாக்கினோம் என்போர்
மனிதருள் மிக நேர்த்தியானவர்கள்,
மகத்தானவர்கள், மிகுந்த செல்வந்தர்கள்
உன்னை அவலட்சணமானவன் என்றும்
தம்மை லட்சணமானவர்களென்றும்
சொல்லிக் கொள்பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையை வரையறுத்தவர்கள்
அறிவியலை வரையறுத்தவர்கள்
வெடிகுண்டை உருவாக்கியவர்கள்
துப்பாக்கிகளை உற்பத்தி செய்தோர்
அடிமைகளை வாங்கி விற்றவர்கள்
உனக்குப் பட்டப்பெயர்கள் சூட்டியவர்கள்
தொடர் கொலையாளி டாஹ்மெர்
பித்துப்பிடித்தவனல்ல என்பவர்கள்
சொல்கின்றார்கள்
யார்? யார்? யார்?

பீட்ரோ ரிக்கோவைக் கொள்ளையடித்தவர்கள்
இந்தியாவை, பிலிப்பீனை, மன்ஹட்டனை
அவுஸ்திரேலியாவை, ஹைப்ரைட் தீவுகளைக்
கொள்ளையிட்டவர்கள்,
சீனர்களிடம் ஒப்பியத்தைத் திணித்தவர்கள்
அவர்களின் கட்டிடங்களை அபகரித்தவர்கள்
அவர்தம் பணத்தினைப் பறித்தவர்கள்
சொல்கின்றார்கள்.

உன்னை முட்டாளென நினைப்பவர்கள்
உன்னைச் சிறையிலடைத்தவர்கள்
பத்திரிகைகளின் சொந்தக்காரர்கள்
அடிமைச் சாசனத்தைக் கையில் வைத்திருப்பவர்கள்
இராணுவத்தை இயக்குபவர்கள்
அந்தப் போலி ஜனாதிபதி, ஆட்சியாளர்
வங்கியாளர் சொல்கின்றார்
யார்? யார்? யார்?

என்னுடையதை அபகரித்தவர்கள்
உன் மூளையைக் குழப்புபவர்கள்
உன் ரொட்டியைப் பறித்தவர்கள்
சொல்கிறார்கள், சமாதானம் தேவையென்று
உனக்குத் தேவை போர்தான் என நினைப்பவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் வளத்தின் சொந்தக்காரர்
உழைக்காமல் கொழுத்தவர்கள்
நிலத்தைப் பிடித்து வைத்திருப்போர்
நீக்ரோவல்லாத ஒருவர்
மிகப் பிரமாண்டமானவர்,
எவரை விடவும் மகத்தானவர்
இந்த நகரின் சொந்தக்காரர்
காற்றையும் நீரையும்
சொந்தமாக்கி வைத்திருப்பவர்
உனது படுக்கையைக் கையகப்படுத்தியவர்
களவும் கொள்ளையும்
மோசடியும் கொலையுமாய் அலைபவர்
பொய்களை உண்மையாக்குபவர்
உன்னை அருவருப்பானவன் என்றழைப்பவர்
மிகப்பெரும் வீட்டில் வசிப்பவர்
மிகப்பெரும் குற்றச்செயல்களைச் செய்பவர்
எப்போது வேண்டுமாயினும்
விடுமுறையில் செல்பவர்
நீக்ரோக்கள் அனேகரைக் கொன்றவர்
அனேக யூதர்களைக் கொன்றுகுவித்தவர்
அனேக இத்தாலியரை, ஐரிஷ் மக்களை
ஆப்பிரிக்கர்களை, ஜப்பானியர்களை
லத்தீனியர்களை அதிகமாய்க் கொன்றவர்
யார்? யார்? யார்?

கடல்களைச் சொந்தமாக்கி வைத்திருப்பவர்
ஆகாயவிமானங்கள், அங்காடிகள்,
தொலைக்காட்சிகள், வானொலிகள்
அனைத்தையும் கைக்குள் அடக்கியிருப்பவர்
எதையெல்லாம் சொந்தமாக்க முடியும் என
அறியாதவற்றையும்கூட கையகப்படுத்துபவர்கள்
உடைமைக்காரர்களினதும் உரிமையாளராயுள்ள
போலி உடைமையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநகரின் சொந்தக்காரர்கள்
நகர்களை சுரண்டித் தின்போர்
சட்டங்களை ஆக்குபவர்கள்
புஷ்ஷை ஜனாதிபதியாக்கியவர்கள்
கூட்டாட்சிக் கொடி பறக்கவேண்டுமென
நினைப்பவர்கள்,
ஜனநாயகம் குறித்து அதிகமும் பேசி
மோசடி செய்வோர்
வேதவெளிப்பாடுகளில் சாத்தானாய் இருப்பவர்
666 - பைபிளில் வரும் கொடூரப் பிராணி
யேசுவைச் சிலுவையிலறையத் தீர்மானித்தவர்
யாரென்று அறிந்தவர்
உண்மையிலே சாத்தானின் பக்கமிருப்பவர்
ஆர்மேனியப் படுகொலைகளால்
செல்வம் கொழித்தவர்
மிகப்பெரிய பயங்கரவாதிகளாயிருப்பவர்
பைபிளையே மாற்றியமைத்தவர்
எண்ணற்ற மனிதர்களைப் படுகொலை செய்தவர்
மிகப்பெரும் அட்டூழியங்கள் இழைத்தவர்
உயிர்வாழ்தலில் எவ்வித அக்கறையுமற்றவர்
குடியேற்றங்களை வைத்திருந்தவர்
அதிகளவில் நிலங்களை அபகரித்துக் கொண்டவர்
உலகையே ஆண்டுகொண்டிருப்பவர்
தம்மை நல்லவர் என்றபடி
அநியாயங்கள் அனைத்தையும் அரங்கேற்றுபவர்
உலகின் மிகப்பெரும் படுகொலையாளி
யார்? யார்? யார்?

எண்ணெய் வளத்தைக் கையகப்படுத்தி
இன்னுமின்னும் வேண்டுமென்போர்
பித்தலாட்டமென பிறகு நீ உணர்வதை
நீ நினைப்பதாகத் தீர்மானித்துக் கூறுபவர்
யார்? யார்? யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் லாடனைக் கண்டுபிடித்தவர் யார்?
அவர்களே சாத்தான்களாய் இருத்தல் வேண்டும்
சி ஐ ஏ இற்குச் செலவளிப்பவர்கள்
குண்டு வெடிக்கப் போவதை அறிந்தேயிருந்தவர்
பயங்கரவாதிகள்
ஃப்ளோரிடாவுக்கும் ஸான் தியாகோவுக்கும்
விமானமோட்டப் பயில்வது ஏனென்பதைத்
தெரிந்து வைத்திருந்தவர்கள்
இஸ்ரேலியர் ஐவர் ஒரு குண்டுவெடிப்பினைத்
திரையிட்ட நோக்கம் என்னவென
அறிந்தே இருந்தவர்கள்
சூரியனும் திணறும் வண்ணம்
கொழுந்து விட்டெரியும் தீயைக்
கொளுத்த விரும்பியவர்கள்
கடனட்டைகளை உருவாக்கி
மாபெரும் வரிகளை இறுத்தவர்கள்
இனவெறிக்கெதிரான மாநாட்டை
பகிஷ்கரித்து வெளியேறியவர்கள்
மெல்கம் எக்ஸை, கென்னடியை, அவர் சகோதரரை,
மார்ட்டின் லூதர் கிங்கை கொன்றொழித்தவர் யாவர்?
யாருக்கு அதுமிகத் தேவையாயிருந்தது?
லின்கனின் கொலையோடு தொடர்புடையவர்களா?
கிரனடாவை ஆக்கிரமித்தவர்கள்
நிறவெறியால் பணம் சம்பாதித்தவர்கள்
ஐரிஷை ஒரு காலனியாக வைத்திருப்பவர்கள்
சிலியையும் நிககுவாராவையும் வீசியெறிந்தவர்கள்
டேவிட் ஸிபெக்கோ, ச்சிரிஸ் ஹனியை
பிக்கோவை, கெப்ரியலை, நெரூடாவை, ஆலன்டேயை
சேகுவேராவை, ஸான்டினோவை
கபிலாவைக் கொன்றவர்கள்
லுமும்பாவை, மொன்ட்லனேயை,
பெடி ஷபாஸ். டை, பிரின்ஸஸ் டி,
ரால்ஃப் ஃபெதர்ஸ்டோனை, லிட்டில் பொபியை எல்லாம்
குட்டிச் சுவராக்கியவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டேலாவை, தோருபாவை, ஜெரனிமோவை
அஸ்ஸாட்டா, முமியா, கார்வே, டேஷேல் ஹம்மெட்
அல்ஃஃபியூஸ் ஹட்டொனை எல்லாம்
சிறையிலடைத்து அழகுபார்த்தவர்கள்
ஹுயே நியூட்டனை, ஃப்ரெட் ஹெம்ப்ட்டனை,
மெட்கார் எவர்ஸை, மிக்கி ஸ்மித்தை,
வோல்ட்டர் ரொட்னியை
கொன்றொழித்துக் கொண்டாடியவர்கள்
ஃபிடலுக்கு நஞ்சூட்ட முனைந்தவர்கள்
வியட்நாமியர்களை அடக்கிவைத்திடத் துடித்தவர்கள்
லெனினின் தலைக்கொரு விலைவிதித்தவர்கள்
யூதர்களை எரிமுகாமுக்குள் பூட்டிவதைத்தவர்கள்
திரும்ப அதையே செய்ய அவர்களுக்கு உதவியவர்கள்
'அமெரிக்காவே முதன்மையானது'
என்று உரத்து முழங்கியவர்கள்

சரி, மஞ்சள் நட்சத்திரம் தரித்தவர்கள்
ரோஸா லக்ஸம்பர்க்கை, லீப்நெக்டைக் கொலைசெய்தோர்
ரோஸன்பேர்க் இரட்டையரின் படுகொலையாளர்
எண்ணிலா நல்லோரை உறையவைத்தும் வதைத்துமாய்
படுகொலை செய்தோர், அழித்தொழித்தோர்
அல்ஜீரியா, லிபியா, ஹெய்ட்டி,
ஈரான், ஈராக், சவூதி, குவைட், லெபனான்,
சிரியா, எகிப்து, ஜோர்தான், பலஸ்தீன்
எல்லா நாடுகளின் செல்வங்களாலும் கொழுத்திருப்பவர்கள்
கொங்கோ மக்களின் கரங்களைத் துண்டித்தோர்
எயிட்ஸைக் கண்டுபிடித்தவர்கள்
இந்தியர்களின் போர்வைகளினூடே
கிருமிகளைப் பரப்பியவர்கள்
கெரோகிப் பழங்குடியினரைக் கொடூரமாய்
இனவழிப்புச் செய்ய முனைந்தவர்
மெய்ன் பிரதேசத்தைக் கொளுத்தியவர்கள்
ஸ்பானிய அமெரிக்கப் போரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்து வைத்தவர்கள்
ஷெரோனை அதிகாரத்தில் அமர்த்தியவர்கள்
பெடிஸ்ட்டாவை, ஹிட்லரை, பிப்லோவை
ச்செய்ங்கெய்செக்கை பின்னிருந்து இயக்கியவர்கள்
ஒடுக்குமுறைக்குட்பட்டோருக்கான பாரபட்சம்
தொடர்ந்துமிருக்க வேண்டுமென்றவர்கள்

மறுசீரமைப்பு, புதிய ஒப்பந்த ஒழுங்கு,
புதிய முன்னணி, மகத்தான சமூகம்
இவற்றையெல்லாம் தீர்மானித்தவர்கள்
டொம் ஆஸ் யாருக்கு வேலை செய்வார் என்பதை
கொன்டலீஸா எப்பேர்ப்பட்ட சீஸா என்பதை
தீர்மானித்து வைத்திருந்தவர்கள்
கொன்னலியை ஒரு நீக்ரோ மரப்பாச்சி பொம்மையாக்க
விலைக்கு வாங்கியவர்கள்
ஹோமோ லூகஸூக்கு அறிஞர் விருதினை
அளித்து மகிழ்ந்தவர்கள்
நிக்ருமாவை, பிஷப்பைத் தூக்கியெறிந்தவர்கள்
ரொபெஸனுக்கு நஞ்சூட்டியவர்கள்
டுபொய்ஸை சிறையிலிடத் திட்டமிட்டவர்கள்
ஜமீல் அல் அமீனை, ரோஸன்பேர்க் இரட்டையரை
கார்வேயை, ஸ்கொட்பொரோ போய்ஸை
சட்டகமிடத் துடிப்பவர்கள்
ஹொலிவுட் 10 இனை வரையறுப்பவர்கள்
ரீச்ஸ்டேகைத் தீயிட்டவர்கள்
உலக வர்த்தக மையம்
குண்டுவைத்துத் தகர்க்கப்படப்போவதை
நன்கறிந்திருந்தவர்கள்
இரட்டைக் கோபுரங்களில் பணிபுரியும்
4000 இஸ்ரேலியப் பணியாளரை
அன்று வீடுகளில் தங்கியிருக்கச் சொல்லியிருந்தவர்கள்
ஏன் அன்று ஷெரோன் அப்பாலேயே இருந்துவிட்டார்?
யார்? யார்? யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுவெடிப்புகளிலேயே மிகக் கோரமானதென
பத்திரிகைகள் கூறியிருந்தன
கொடிய சாத்தானின் முகம் அதில் தெரிந்தது
போரினால் பணம் பண்ணுபவர்கள்
பயத்தையும் பொய்களையும் விற்று
வயிறு வளர்ப்பவர்கள்
ஏகாதிபத்தியத்தாலும் தேசிய அடக்குமுறையாலும்
பயங்கரவாத வன்முறைகளாலும்
பசியாலும் வறுமையாலும்
இப்படித்தான் உலகம் இருத்தல் வேண்டுமென
எப்போதும் நினைப்பவர்கள்
நரகின் ஆட்சியாளன் யார்?

அதிகாரம் மிகைத்தவன்
நீ ஒருபோதும் பார்த்திராத கடவுளா?
ஆனால், எல்லோரும் பார்த்திருக்கிறார்கள்
உன் வாழ்வில், உன் மூளையில், உனக்குள்
ஒரு கோரமான குண்டுவெடிப்பைப் போன்ற
கொடிய சாத்தான்
ஓர் ஆந்தையைப் போல
எல்லா இரவுகளிலும் எல்லாப் பகல்களிலும்
நீ கூர்ந்து கவனித்தால்
நரக நெருப்பினில் கிளைக்கும் அமில வாந்தியைப்போல
வெறிமிகைத்த பைத்திய நாய் போல்
வெடித்துக் கிளம்பும் பெருநெருப்பில்
மேலெழும் அந்தக் கேள்வியைச் செவிகூரலாம்
யார்? யார்? யார்? யா.........ர்? யா.........................ர்?

●

** *கு க்ளக்ஸ் க்ளான் — வெள்ளையின நிறவெறிக் குழு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா அஞ்சலோ (Maya Angelou)

"மாயா அஞ்சலோ" — புகழ்பெற்ற கவிதாயினி. கல்வியாளர், நாவலாசிரியை, நாடகாசிரியை, நடனக் கலைஞர், நடிகை, படத்தயாரிப்பாளர், பத்திரிகையாளர், வரலாற்றாசிரியர், மனித உரிமைப் போராளி என்று பன்முக ஆளுமைகளின் சங்கமம். "உலகின் மறுமலர்ச்சிப் பெண்" (Global Renaissance Woman) என்று போற்றப்படும் இவரது இயற்பெயர் மார்கெரட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் நான் எழுவேன்!

கசப்பான திரிபுற்ற பொய்களைப் பூசி
வரலாற்றில் கடைநிலையில்
என்னை நீ எழுதலாம்;
அழுக்குக்குள் தோயும்படி
அழுத்தமாய் மிதிக்கலாம்
என்றாலும் நான் எழுவேன்,
சிறு புழுதியைப் போல!

எனது தோற்றமுனை வருத்துகின்றதா?
வாட்டமுற்று நீ வருந்துவதேன்?
என் வீட்டின் முன்னறை அருகிருந்து
முடுக்கிவிடத் தோதான
பல எண்ணெய்க் கிணறுகளை
அடையப்பெற்றதுபோல்
நான் நடப்பதைக் கண்டுதானோ?

நிலவினைப் போல்
பகலவன் போல்
கடலதன் மேலெழும் அலைகளைப் போல்
கிளர்ந்தே உயர்ந்தெழும்
நம்பிக்கைகளைப் போல்
மேலும் நான் எழுவேனே!

தாழ்த்திய விழியுடன்
தலை கவிழ்ந்திருக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதழுது அரற்றியே
தொய்வுற்ற ஆன்மா,
கண்ணீர்த் துளியென
துவள்கிற தோளுடன்
நொறுங்கிய நிலையில்
எனைக் காணவோ விழைகிறாய்?

என்னுடைய கொல்லை(ப்புறத்தில்)யில்
பொன்னுடை சுரங்கங்கள்
பெற்றதைப் போல நான்
வாய்விட்டுச் சிரிக்கிறேன்.
என்னுடைய 'நிமிர்வு' உன்னுள்
சீற்றத்தை விளைக்குதோ?
கடின உழைப்பின் பயன் என
அதனைக் கொள்ளாயோ?

சுடுமொழி கொண்டு நீ
என்னைச் சுடலாம்
விழிகள் இரண்டினால்
வெட்டியும் போடலாம்
தீரா வெறுப்பினால்
எனை நீ கொல்லலாம்
ஆனால்,
வீசிடும் காற்றாய்
அதன் பின்னும் நான் எழுவேனே!

வைரங்கள் கிடைத்ததாய்
கால்களை இணைத்து நான்
நடனத்தில் திளைக்கையில்,
என்னில் எழும் கிளர்ச்சி
உனைத் துன்புறுத்துகிறதோ?
ஒரு புதிராகத் தோன்றியே
வியப்பினில் ஆழ்த்துமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று இழிவென்னும்
குடில்களைத் தாண்டி
நான் எழுவேன்!
வலிகளில் வேரோடிய
கடந்தகாலத் தடமிருந்து
நான் எழுவேன்!

நான் ஒரு கருங்கடல்,
ஆழ்ந்து அகன்றவள்
பொங்கியே ஆர்த்தெழும்
பேரலையானவள்!
பயமெனும் இருள்களைப்
புறந்தள்ளி எழுவேன்!

அற்புதமானதோர்
புலர்காலைப் பொழுதாய்
நான் மீள எழுவேன்!
என் முன்னோர்கள் தந்திட்ட
முதுசொம்கள் சுமந்து
அடிமைகள் சமுதாய
விடுதலையின் கனவாய்
நான் எழுவேன்,
எழுவேன்,
எழுவேனே!

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சுள வெடிவர்தன (Manjula Wediwardena)

90களில் தென்னிலங்கையில் இடதுசாரிச் செயற்பாட்டாளராக தீவிரமாய்ச் செயற்பட்ட மஞ்சுள வெடிவர்தன மாற்றுப் பத்திரிகையாளராக 'ராவய' ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகித்தவர். சிறந்த நாவலாசிரியர், சிறந்த கவிஞர், சிறந்த நாடகாசிரியர் எனப் பல்வேறு தேசிய விருதுகளைப் பெற்றவர். 'மரியா எனப்பட்ட மேரி' என்பது இவரது சிறுகதைத் தொகுதி. தலைப்புச் சிறுகதை தீவிர சர்ச்சைக்குரியதாய்க் கருதப்பட்டதால், இத்தொகுதி இலங்கையில் தடைசெய்யப்பட்டது. 'நான் லிங்கமாலன் ஆனேன்', 'நிமலராஜனின் அம்மாவுக்கு', 'அவனொரு புதிய தமிழன்' எனும் கவிதைகள் ஏற்கெனவே தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு பிரசித்தி பெற்றுள்ளன. அவரது கவிதைகள் பஹீமா ஜஹான், ரிஷான் ஷெரீஃப் ஆகிய இருவராலும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. அவரது வேறுசில கவிதைகளை இப்னு அஸூமத், செல்வர், என். சரவணன் ஆகியோரும் மொழிபெயர்த்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் லிங்கமாலன் ஆனேன்

வெசாக் முழுநிலவு
தலையில் கைவைத்துப்
புலம்பி அழுகிறது
சாளரம் வழியே அதன்
மூக்குச்சளி வழிகிறது

அயல் வீடொன்றில்
புத்தரின் பிறப்பை, துறவை
பரிநிர்வாணத்தை
நினைந்து பூசித்த ஏழு தாமரைகளும்
இன்னுமே வாடவில்லை

தொலைவிலோர் 'தொரண்'
பந்தலின் அருகே
போதி மாதவனின்
550 பிறவிக்கதைகளின்
சாராம்சத்தை நவீனப்படுத்தி
'புதுக்கதை' புனைந்து இயற்றிய
'விரிது'க் கவிகளின் இன்னிசை
இடைக்கிடை கேட்கிறது.

என் முன்னே
கவிதைத் தவமிருக்கும்
ஒரு வெற்று வெள்ளைத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கணத்தினில்
எங்கிருந்தோ ஒரு தசைத் துண்டு
பறந்து வந்து அந்தத்
தாளில் அழுந்தியோர்
யோனியாய் உருமாறிற்று
நிச்சயம் அது
கோணேஸ்வரியுடையதாய் இருத்தல் வேண்டும்.

அம்பாறையில் இருந்து
கொழும்புக்குப் பறந்துவர
இத்தனைக் காலமாயிற்றோ?

அவ்வளவுதூரம் நாம்
தொலைவினில் உள்ளோம்!
என்னிரு விழியிலும்
கண்ணீரின் குளம்.

விழிநீர் மத்தியில் நான்
அங்குலிமாலன் அல்ல,
லிங்கமாலன் ஆனேன்
விரல்கள் வேண்டாம் எனக்கு
ஆண்குறிகளே தேவை
அத்தசைத் துண்டத்தை

பக்தி சிரத்தையாய் இடக்கரம் எடுத்து
கூரிய வாளினை வலக்கரம் ஏந்திப்
புறப்பட்டுப் போனேன்

வழியெங்கும் எதிர்ப்பட்ட
வீடுகளைத் தட்டினேன்
சிங்கள ஆண்குறிகள்
அனைத்தையும் வெட்டியோர்
நூலினில் கோத்தேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் என்னதும்...
ஆ!!

வேதனை சகித்து
ஸ்ரீபாத மலைக் கழுத்தில்
குறிமாலை சாத்தினேன்
எனைத் தடுத்தாட்கொள்ள
ஒரு புத்தரிங்கு இல்லாததால்
நிச்சயம் இதனைச் செய்திடல் சாத்தியம்

சகோதரத்துவமற்ற
உணர்ச்சிகள் ஏதுமற்ற
ஓரினம்தான் எதற்கு?

என்னெதிரில் ஒரு வெற்றுத்தாள்
அதில் இரத்தக் கறை
அது ஒரு கவிதை
தமிழ்க் கவிதை.
அதனால்தான் அது
சிங்களவருக்குப் புரியவேயில்லை.

●

குறிப்பு: *அங்குலிமாலன்— தன்னுடைய குருவின் துர்ப் போதனையால் ஆயிரத்துக்கும் அதிகமானோரைக் கொலைசெய்து, அவர்களின் கட்டைவிரல்களை வெட்டியெடுத்து மாலையாகக் கோத்துக் கழுத்தில் அணிந்துதிரிந்து, பின்பு புத்தரின் போதனையால் திருந்தி துறவியாய் மாறி அஹிம்சை வழி சென்றவன்.*

கோணேஸ்வரி முருகேசபிள்ளை — 1997, டிசம்பர் 17 ஆம் நாள் இலங்கை, அம்பாறை, சென்ரல் முகாமைச் சேர்ந்த இராணுவத்தால் பிறப்புறுப்பில் கிரனைட் எறிந்து, படுகொலை செய்யப்பட்ட நான்கு குழந்தைகளின் தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனொரு புதிய தமிழன்

உண்மைதான்! நான் ஒரு சிங்களவன்
ஆம், சிங்களவன்
நான் ஒரு சிங்களவன்
சுத்த சிங்களவன்

தமிழ்க் கனவெனில்
தமிழிலேயே காணுதல்
வேண்டுமென விழைந்ததால்
தாய்த் திருநாட்டில்
வாழ்தல் மறுக்கப்பட்டேன்

நான் சிங்களத்திலேயே சிந்திக்கிறேன்
ஈழத் திருநாட்டிலிருந்து
துடைத்தெறியப்படும்
கடைசித் தமிழனைப் பற்றியும்
கவி வரைவேன் சிங்களத்தில்

சிங்களவனாய் இருப்பதாலேயே
கவிதை எழுதும் - என்
கரங்களிலும் இரத்தம்
எழுதுகோலின் வழியே
ஊறுவதும் இரத்தம்தான்!

சிங்களத்தில் சிரிக்கத்தான்
விருப்பம் எனக்கு
அதனாலேயேதான் அது எனக்கு
சாத்தியப்படவே இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவக் கடையில் சாப்பிட்டபடி
முல்லைத்தீவைக் கைப்பற்றுவது பற்றி
சிந்தித்துக் கொண்டிருக்கும்
என்னுடைய நண்பன்
மின்னஞ்சல் வழியே
உழுந்து வடையொன்றை
அனுப்பி வைத்திருந்தான்

தோழனே,
சொந்த நாட்டுக்குள்ளே
துரத்தப்பட்டோராய் வாழ்வதிலும்
வாழ்வை வேற்றிடத்தில்
கழிப்பது பரவாயில்லைதான்!

புதியதொரு கவிதை - என்
இதயத்துள் ஜனிக்கிறது;
அதுவும்கூட ஒரு
தமிழனைப் பற்றியதே!

அவனோர் 'புதிய தமிழன்'
சிங்களத்தைப் பார்த்துச்
சிரிக்கின்ற தமிழன்

அவனை நான்
சிங்களத்தில் வாழ்த்துகின்றேன்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசுன் மகேந்திர ஹீனட்டிகல
(Kasun Mahendra Heenatigala)

கசுன் மகேந்திர ஹீனட்டிகல வளர்ந்து வரும் சிங்களக் கவிஞர், பாடலாசிரியர், குறும்பட இயக்குநர். இவரது முதலாவது கவிதைத் தொகுப்பு 'கவி அசிட்' 2013 ஆம் ஆண்டு வெளிவந்தது. முள்ளிவாய்க்கால் கொடூரங்களுக்கும் சிறுவன் பாலச்சந்திரனின் படுகொலைக்கும் எதிரான தனது இரங்கலுணர்வைக் கவிதையாய் வடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே மாதத்தில் இவ்வளவு அந்தகாரம் ஏன்?

மிருதுவான பிஸ்கட்
பூஞ்சணச் சுவையுடன்
கடிபடுவதேன்?

வாய்க்கு வாய் டொன் கணக்கில்
குருதி பெருகி வழிகின்ற
மாதமே மே!

சிறு மொட்டினைக் காம்புடனே
பிய்த்தெறிந்து வீசியதும் ஏன்?

இசைபாடும் புள்ளினத்தின்
அழகான சிறகருகே
முட்கம்பி கிழிக்கின்ற
பிரதேசம் நிறைந்துள்ள மே

மஞ்சள் நிறச் சன்னங்கள்
அடுக்கடுக்காய் வெளியேறி
வண்ணத்திப் பூச்சிதேடி
வேட்டையாடி நின்றதுவும் ஏன்?
''நிலவினை''க் கொன்றொழித்த
வானகத்து இடந்தோறும்
தாரகைகள் அணைந்துவிட
இங்கே பிறக்கிறது மே

ஏன்?
மே மாதத்தில் மட்டும்
இவ்வளவு அந்தகாரம் ஏன்?
●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லஹிரு மதுசங்க லியனாராச்சி
(Lahiru Madushanka liyanarachi)

லஹிரு மதுசங்க லியனாராச்சி ஓர் இளம் சிங்களக் கவிஞர், எழுத்தாளர், புகைப்படக் கலைஞர், ஊடகவியலாளர். தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பில் குரலெழுப்பிவரும் சமூகச் செயற்பாட்டாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவப்புப் பொட்டுக்காரி

காரைநகர் ஊரி எனும் ஊரில்
பள்ளிசெல்லும் சிவப்புப்பொட்டுக்காரி
பாதை மருங்கிருக்கும் ஓநாய்கள்
உன் நெற்றிப் பொட்டழித்தாரே!

நீ வரும்வரை பார்த்திருந்த அன்னை
உனக்காகத் துயருற்ற உனதருமைத் தந்தை
அன்னை தந்தை சொல் கேட்டவளே, தங்கையே!
தென்னிலங்கை உணருமா, உன் துன்ப கங்கையை?

ஆயுதமேந்திய விலங்குகள்
எல்லா இடங்களிலும் நிற்கும்
சங்கமித்தையைக் காணத்தெரியா கண்களவை,
நெற்றித் திலகத்தை மட்டுமே காணும்!
வேடம் தரித்த மிருகங்கள் இவை
எனவே
உன் சகோதரிகளை நீ காத்துக்கொள் தங்காய்!

●

குறிப்பு: *சங்கமித்தை — அசோகசக்கரவர்த்தியின் மகள்; இலங்கைக்கு வெள்ளரசு மரக்கிளையைக் கொணர்ந்த பௌத்த பிக்குணி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனே நீ எங்கே?

பலகாலம் வாராத கூந்தல்
கலைந்து வெளிறிய சேலை
ஒளிப்படத்தை இருகரமேந்தி
உனைத் தேடியலைந்த நாட்கள்
இன்னும் உயிர் மட்டும் மிச்சமிருக்கின்றது

அன்னையர் விழிகளில் பெருகிடும் கண்ணீர்
கொணர்ந்து சேர்க்குமோ நிம்மதியினையே
மகன்களைத் தேடிடும் மாபெரும் போராட்டம்
மனதினுள் அழுத்தமாய்த் தொடரும்
கண்ணீரைக் கண்டஞ்சியே ஒரு
பாதுகாப்பு வளையம் சுற்றிவளைக்கும்

உம் நினைவுகளின் தடங்கள்
அழுந்திக் கனத்திடும் உள்ளங்கள்
விம்மி விம்மிக் கதறிடும் அன்னையர்
பிள்ளைகள் பற்றி ஏதுமுரைக்காமல்
இதயங்களை நொறுக்கிடும் இவர்கள்
'மகனே, நீயெங்கே?' ஆழ்துயரார்ந்த மனங்கள்
ஏங்கிக் கேள்வியெழுப்பிடும்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோக ஹந்தகம (Asoka Handagama)

அசோக ஹந்தகம பிரபல சிங்களத் திரைப்பட இயக்குநர், கவிஞர். சந்தகின்னரீ, சந்த தடயம (நிலா வேட்டை), மே மகே சந்தய் (இது எனது நிலா), விதூ, இனி அவன், எகே எஸ் அக (அவளின் விழியோரம்), தனி தட்டுவென் பியாபன்ன (ஒற்றைச் சிறகால் பறத்தல்), அக்ஷரய (அட்சரம்), அல்கஹோல் நெத்தி பியர் (அல்கஹோல் இல்லாத பியர்) என்பவை இவரது திரைப்படங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தரும் வருவார்!

மொஹமட், ஃபாதிமா, முஸ்தஃபா!
நிராயுதபாணிகள் நாம்,
கையறுநிலையினர்!

'83 இலும் கையறுநிலையில்
வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தோம்,
"துன்ஹலே காட்டினுள்
சிங்கக் குட்டிகள் இல்லை,
அவை நாட்டைத் துறந்துள"
என்று சொல்லிச் சொல்லியே
அவர்கள் தீவைத்துக் கொளுத்தியபோது...
ராமலிங்கத்தை, பார்வதியை
வெட்டிக் கொன்றபோது...

"வடபுலத்தில் புன்னகைசெய்
தங்கையே செல்லம்மா!"
என்று பாடிப் பாடி
பாடலுக்குள் மனசாட்சியைப்
புதைத்து வைத்தபடி பார்த்திருந்தோம்,
கையறுநிலையில்
தனித்தனியே... தனித்தனியிடத்தே!

தாஸிம், உன் வீட்டு வாயிலருகே
தனது பெயரால் ஆயுதம் தரித்து
தீக்கொளுத்தி அவர்கள் மகிழ்வதைக் கண்டு,
சந்திகள் தோறும் எழுந்தருளி இருப்பினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிராயுதபாணி புத்தரும்கூட
கையறுநிலையில் நின்று தவிக்கிறார்!

தனித்தனியே கண்ணீர் சிந்தவும்
பெருமூச்சு விட்டுப் புலம்பி அழவும்
ஃபேஸ்புக் சுவரினில் கவிதைகள் எழுதவும்
தவிர,
நிராயுதபாணிகள் எங்களனைவர்க்கும்
ஒன்றாய் இணைந்து உருப்படியாக
செய்தற்கு எதுவுமே எஞ்சியில்லையா?

குறைந்தபட்சம் ஒன்றாய் இணைந்து
கண்ணீர் பெருக்குவோம்,
கண்ணீர் மழைபோல் பெருகி வழியட்டும்,
எரியும் தழலினை கடுகித் தணிக்கட்டும்!

ஒன்றாய் இணைந்தே பெருமூச்சுவிடுவோம்
நெடுமூச்செல்லாம் புயலென எழட்டும்,
கள்ளக் 'காவி'களைக் கழற்றி எறியட்டும்!
ஒன்றாய் இணைந்தே ஒப்பாரி வைப்போம்
அழுகை இடியென ஓங்கி முழங்கிட
அவர்களின் செவிப்பறை வெடித்துச் சிதறிட!

சத்தியமாய்ச் சொல்லுகின்றேன்,
புத்தரும் வருவார்
நமது அணியில் நம்மோடு நின்றிட!

(16/06/2014)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதீ கம்மெல்லவீர (Nadee Kammellaweera)

பிரபல சிங்கள எழுத்தாளர் ஜயதிலக்க கம்மெல்லவீரவின் மகளான நதீ கம்மெல்லவீர ஒரு சிங்களக் கவிதாயினி, திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நடிகை, சமூகச் செயற்பாட்டாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண்ணில் ஈன்றதற்காய் என்னை மன்னித்துவிடு!

எந்தன் சின்ன மகன்
இருட்டுக்குப் பயம் என்று
ஓடி வந்து என்னருகில்
அணைந்து கொண்டான்
பேயெவையும் இங்கு வரா
அம்மா அருகிருக்க
என்ன பயம் என்று சொல்லி
மார்போடணைத்தவனை
மீண்டும் மீண்டும் முத்தமிட்டேன்
இதயத்தின் எங்கோ ஓர்
மூலையிலே தொடங்கி
கிளர்ந்தெழும் வேதனையில் - எந்தன்
உடல் முழுதும் வலிக்கிறது

நிமலரூபனின் சடலத்தை முத்தமிட்டு
ஒப்பாரி வைத்தழுத வயோதிகத் தாய்
தூரத்தில் இருந்து எனைப் பார்த்திருந்தாள்
முந்தானைத் தலைப்பினாலே
கண்ணீரைத் துடைத்தவளாய்
திரும்பித் திரும்பிப் பார்த்தபடி
மெல்ல மெல்ல நடக்கின்றாள்...

என்னிரு கரங்களாலும்
முரட்டுத்தனமாய் (மகனை)
இன்னுமின்னும் இழுத்திறுக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்துக் கொள்கின்றேன்
"இந்த மண்ணில் உன்னை நான்
ஈன்றெடுத்து விட்டதற்காய்
மன்னித்துவிடு என்னை"
அதே முகம் கொண்டிருக்கும்
(மகன்) விழிகள் பார்த்தபடி
ஆயிரமாவது தடவையாய்
முணுமுணுக்கின்றேன், நான்...

"பிறந்துவிட்டவர்களை எல்லாம்
வாரிச் சுருட்டியெடுத்து
மீண்டும் கருவறைக்குள்
செலுத்திவிட முடியாததால்,
இன்னுமே பிறக்காதவர்கள்
ஒருபோதுமே பிறவாதிருக்கக் கடவதாக!"
என்றே வேண்டுகிறேன்!

●

குறிப்பு: *வவுனியா சிறைச்சாலையில் (03.07.2012) படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதி நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக எழுதப்பட்ட சிங்களக் கவிதை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேஷ் முனசிங்ஹ (Mahesh Munasinghe)

இவர் ஒரு சிங்களக் கவிஞர். இவரது 'மல தூபத்த' (பிணத்தீவு) கவிதைத் தொகுதி 2015 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலில் உள்ள பெரும்பாலான கவிதைகள் நான்காம் கட்ட ஈழப்போர் நிகழ்வுகளைக் கருவாகக் கொண்டமைந்தவை. தமிழ் மக்களின் உணர்வுகள், உரிமைகளுக்காய்க் குரலெழுப்பிய முக்கியமான சிங்களக் கவிஞர்களுள் ஒருவராக இவரை அடையாளப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நண்பனின் சிங்களக் கவிதை

வம்சத்தைக் கைவிட்டு
உடன் வாழ்ந்தவளையும் கடந்து
நண்பா! உன் தோள்தேடி வந்தேன்
கிளர்ந்தெழுந்த இந்த
சிக்கலினைச் சொல்லுதற்கு
தவறென்றால் தண்டனைக்காய்
துயரென்றால் ஆறுதலுக்காய்
இருந்து நின்றேனும்
வாய்விட்டுச் சிரிப்பதற்கு
உன்னிடம் வந்துற்ற
ஞாபகங்கள் எனக்குண்டு
மறுமொழியேதும் சொல்லாவிடினும்
செவிமடுத்திருந்தாய், நீ
அஃதுண்மை!

தற்கொலைத் தாக்குதல்
நடத்தவில்லை நான்
நம் வாழ்வின் பெறுமதி அறிவேன்
காரணங்களை அறிவேன் எனினும்
தீர்வுகளைக் காணேன் நான்
பித்துப் பிடித்த யுத்தமெந்தன்
மத்தியிலிருந்து தோன்றிடவில்லை.

உனக்குப் பின்னால்
நாம் சேர்ந்து வாசித்த
நூல்களின் மலைகள் இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வினை, அன்பினை
வேண்டிப் பிதற்றிக் கிளர்ந்தெழுந்தபடி
ஊன்றி நாம் வைத்துச் சென்ற
பாதத்தடங்கள் மறைந்துள, கவனி!

ஒன்றாய் உறுதியுறவே நாம்
சொன்னவையும் செய்தவையும்
சேர்ந்து அனுபவப்பட்டவையும்
அனந்தம் தான் எனினும் உனைக்
காணாமலேயே கடந்துவிட்ட
காலத்தின் நீளம் அதிகம்தான்
என்றாலும்
நமக்கிடையிலான இத்தொலைவு
சுவர்ச் சித்திரமொன்று
அழிய நேரும் காலத்தினும்
நீளமில்லை அறிக, நீ!

ஒட்டுமொத்தமாய்த் தோற்று நிற்கையில்
எட்டிவிடும் சிறுவெற்றிக்கிடையில்
வெறிபிடித்த மனிதக்கூட்டத்திருந்து
சாட்சியில்லா ஒரு வழக்கில்
வாக்குமூலங்கள் புறந்தள்ளி
நண்பனே!
என்னை நோக்கி எறிதற்காய்
முதற் கல்லை நீயே எடுத்திருந்தாய்!
●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்த பொட்டு

தினமும் காலையிலே
உன் சுட்டுவிரலினால் நம்
இருவர் புருவ மேட்டிடையும்
இட்டிடுவாய் தவறாமல்
ரத்தச் சிவப்பாய்
ஒரு பொட்டு!

முதலில் நீ வைப்பாய்
அடுத்தென் நெற்றியிலிடுவாய்
அந்தச் சண்டை நினைவிருக்கா?
'அம்மா தான் முதலாவது
நான்தான் ரெண்டாவது''

இறுக அணைத்துக் கொஞ்சி விளையாடி
வாய்விட்டுச் சிரித்தபடி
நட்ட நடு இரவினிலே
'பங்கரை'விட்டுக் கிளம்பிய அப்பா
மீண்டுவரப் போவதில்லை என்பதை
நன்றாகத் தெரிந்திருந்தும்
பொட்டினால் பொலிவுற்ற
சாந்தமிக்க அந்த முகம்
எனைப் பிரிந்து செல்கையிலும்
அப்படியேதான் இருந்தது
நான் பார்த்திருக்கத் துளையுண்ட
உன் பொட்டில் பீறிட்ட
ரத்தச் சகதிக்குள் அழுந்தி மூழ்கிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உன் வெள்ளைமுகம்.
அழமட்டும் தெரிந்த நானோ
உன் உடலம் கட்டிக்கொண்டு
கதறினேன்
கதறினேன்
கதறியழுதேன்...

வித்தியாசம் அதிகமில்லை
'பங்கர்' இல்லாதது மட்டும் தான்,
பெயர்ப் பதிவேடற்ற மரத்தடிப் பள்ளிக்கூடம்
பழகிப்போய்விட்டது இப்போதெல்லாம்

உன் நினைவெழுகையிலே
குண்டுச் சத்தமெழும்போது துடித்ததினும் வேகமாய்
என் இதயம் துடிதுடிக்கும்
எனையறியாமலேயே
இருவிழியில் அருவி பாயும்

பொட்டைப் பற்றிக் கேட்காதீர்கள்
அம்மாவுக்கு இல்லாத பொட்டை
நானினி வைக்கமாட்டேன்
அம்மா - அப்பா பற்றியெல்லாம்
படிப்பிக்க வேண்டாமினி
எனக்கு மட்டுமல்ல
எங்களில் யாருக்குமே தாங்கமுடியுதில்லை.

(ஜூலை, 2009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுகொள்ளாதிருப்பதைத் தவிர்ப்பதற்காக...

அவள் நிர்வாணமாயிருந்தாள்

பகலின் ஒளியுறிஞ்சி
இரவின் இருட்டை
வானுக்குப் பகிர்ந்தபடியிருந்தது நிலம்
கரமிருந்த மெல்லிய போர்வையால்
சிதைந்த மென்னுடலை மூடிவிட்டு
நீ அவளைப் பாராதே கடந்துசென்றாய்

பொறு!
நீ அவளை அடையாளங்காண வேண்டும்
அவளை நன்கறிந்த அயலவன் நீதான்

அவர்கள் வெடிவைத்து எரித்துச் சாம்பலாக்கியது
ஆண்களெனும் சரித்திரத்தைத்தான்
வல்லுறவுகொண்டு கடலெறிந்ததென்னவோ
பெண்களெனும் உரிமையைத்தான்
இந்த அனைத்தையும் புறந்தள்ளியபடியேதான்
நீயிருந்தாய்

பூமி கிளர்ந்தெழ
ஆண்களின் சாம்பல்,
துளிர்க்கும் தளிருக்கு உரமாகக்கூடும்
கடல்நீர் ஆர்ப்பரித்தெழ எழ
நாளையும் பெண்ணுடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கரை ஒதுங்கக்கூடும்
நாளை மறுநாளும்
அதற்கடுத்த எல்லா நாள்களிலும்கூட...

கரையொதுங்கிக் கிடக்கும் நிர்வாண உடல்
சிதைத்தழிப்பது
கலாசாரத்தையும் ஒழுக்கவிழுமியங்களையும் என்றால்
உன் கரமிருக்கும் கடைசிப் போர்வையால்
அதுவும் ஓர் முடிவுக்கு வருதல்கூடும்!

நெற்றியில் தொடங்கி
கால்விரல் நுனிவரைக்கும்
கவனமாய் உற்றுநோக்கு
இந்த உருவத்தை அச்சொட்டாய்
அடையாளம் காணத்தக்க
அவளின் அயலவன் நீயேதான்!

(2016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காஸாவும் எங்கள் அம்மாவும் வன்னியும்

ரத்த வெள்ளத்தில் கண்டெடுத்த
பிஞ்சுகளின் உடல்கள் கண்டு
அழுது புலம்புவாள் எங்கள் அம்மா
எங்கோ தானறிந்திராத காஸா பிரதேசத்தில்
நடக்கும் யுத்தத்தை
வாய் ஓயாமல் ஏசிச் சபித்தபடி

'முடிக்கப்படுவது' என்னவென்றறியாமலேயே
"இந்த முறை எங்கள் பொடியன்மார்
இதை முடித்தே தீருவார்கள்"
என்றபடி நிம்மதியாய் நெடுமூச்செறிகின்றாள்,
நன்கு தானறிந்த வன்னியில்
தானறியா யுத்தத்திற்கு
மும்மணிகளின் ஆசியை
இறைஞ்சித் துதித்தபடி..

(2009 ஜனவரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்காத கவிதை

தாயின் கருவறைக்குள்ளேயே
நரவேட்டையர்களுக்கு இரையாயிற்று
கண்மடல் திறக்காத
குருவிக் குஞ்சொன்று.
வெடித்துச் சிதறுண்டு சின்னபின்னமாகிப்போன
பனிக்குடத்தின் ஊடே
பவித்ரமான மென்சிறகொன்று
ரத்தந்தோய்ந்து வெளிக்கிளம்பிற்று.

மழலையின் இதழ்களிடை அமுதூட்டுதற்காய்
கனத்தபடிக் காத்திருந்த
வெடிப்புற்ற முலைக்காம்பிருந்து
கண்ணீரின் உருக்கொண்ட பாற்துளிகள் பீறிட்டன
ரத்தமும் பாலும் இரண்டறக் கலந்திட
பேசாமடந்தை, அந்நிலமென்னும் நல்லாளும்
நெடிதுயிர்த்து விம்முதல் கேட்டது.

பிள்ளை கனவு கண்டிருக்கும்,
பால்மணம் மாறா மென்சிரிப்பு
மலர் முகத்தில் பூத்திருக்கும்
அன்னை கனவு கண்டிருப்பாள்,
பால்வெள்ளைச் சிரிப்பினது
மெல்லொலியைக் கேட்டிருப்பாள்.
மிருகங்கள் அங்குவந்து
கனவுகளைச் சிதைத்திருக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதைத் துண்டங்களுக்கிடையிலவை
தூக்கியெறியப்பட்டிருக்கும்!

உன்னைப் பலியெடுத்த
பெருவனத்து மிருகங்கள் உன்
தாய் மண்ணைக் கொள்ளையிடும்.
ரத்த வேட்டையின்
வேட்கையால் மோப்பமிடும்
பிறந்தே இருந்தாலும்
வாழ்தல் எங்கு அமைந்திருக்கும்,
பறக்கும் வானையுமே அவை அபகரித்திருக்கையிலே?

அழாமலேயே இருக்கின்றேன்
வன்னிக்கும் எனக்கும் தொலைவதிகம்.
பொறுத்திருக்கின்றேன்.
அசைவின்றிக் கிடக்கின்ற
மழலைச் சிறகருகே
கனவிலென் கரம் நீட்டி
விரல்பற்றிக் கொள்ளுமோவென
காத்திருக்கின்றேன், நான்.

(வன்னியில் மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட கர்ப்பிணியான தமிழ்ப் பெண் ஒருவரின் புகைப்படத்தைக் காணநேர்ந்தபோது - 2009 மார்ச்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தமிழன்

வீரசேனவின் வேலையிழப்புக்காய்
ஆடைத் தொழிற்சாலையருகில்
கொடும் வெயிலெரிக்கையிலும்
தொண்டை வற்றும் வரை
குரலெழுப்பிப் 'பிக்கட்டிங்' செய்த
நான் தமிழன்.
வீரேக்கு மீளவும் வேலைகிடைத்தபோது,
''நடே சகோதரனுக்கு ஜயவேவா!''
ராசாவைப்போல் நீங்கள்
தோளில் சுமந்துசென்ற
நான் ஒரு தமிழன்.

வேலைநிறுத்தத்தில் துப்பாக்கிப் பிரயோகம்
குண்டடிபட்ட சிரிபாலவை
இருகரமேந்திப் பறந்தோடி
பெரியாஸ்பத்திரியில் சேர்த்த
தமிழன் நான்.
'சேலைன்' குழாய்கள் பின்னிப் பிணைந்த
ஆஸ்பத்திரிக் கட்டிலருகில்
''நடே, என் உயிர் காத்தாய், நானுனக்கு
கடன்பட்டிருக்கிறேன் நண்பா'' என்று
கட்டியணைத்து ''சிரா'' அன்றழுத
நான் ஒரு தமிழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பிணிப் பெண் குசுமாவின்
உயிர் ஊசலாடுகையில்
'சிங்கள ரத்தம்' தாருங்கள்' என்றெவரும்
ஆஸ்பத்திரியில் கேட்கவில்லை
கட்டில் தலைமாட்டிருந்த
வைத்திய அறிக்கையில் கேட்டிருந்த
''ஓ நெகடிவ்' ரத்தம் ஓடிடும்
நான் தமிழன்.
பிரசவித்த ஆசுவாசக் கணமொன்றில்,
'மகனே, நீ நடே மாமாவுக்கே சொந்தம்'' என்று
மகவை என் கரம் தந்தாலுமென்ன,
நான் ஒரு தமிழன்தான்.

வீரே, உன் குரல் கேட்கிறது
பிக்கட்டிங் செய்கின்றாய்,
'தமிழனைக் கொன்றொழித்தாவது
சமாதானம் வேண்டு''மென்று.
சிரோ, இங்கே ஆஸ்பத்திரி எதுவுமில்லை
ஷெல் விழுந்து தரைமட்டமான
கல்லுக் குவியலே எஞ்சியுள்ளது.
குசுமா, 'ஓ நெகட்டிவ்' ரத்தம்
நாற்புறமும் ஒழுகியோடுது,
பெறுமதியறியாக் கட்டாந்தரைக்கு அதை
உறிஞ்சிடவும் முடியவில்லை.

முழுமொத்த இனசனமும்
சுடுகாடு எய்திற்று
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்
கொத்துக் கொத்தாகச் செத்து மடிந்தனர்
தனித்துயிர் ஊசலாடும்
நான் ஒரு தமிழன்.

(2009 மே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்தெட்டு எண்பத்தொன்பது

மனிதர்மீதான தாக்குதல் நடவடிக்கையின்
உண்மையான இயல்பு
நாம் அறியாததா, என்ன!

நாம் அறிய மாட்டோமா,
'குறைந்தபட்ச சேத'த்தின்
நீள அகலங்களை!

(2009 பெப்ரவரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லியனகே அமரகீர்த்தி (Liyanage Amarakeerthi)

இவர் ஒரு சிங்களப் பேராசிரியர். இடதுசாரி முகாமைச் சேர்ந்த எழுத்தாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், ஆய்வாளர், சமூகச் செயற்பாட்டாளர் எனப் பன்முக ஆளுமை கொண்டவர். சிங்கள மொழி நாவலுக்கான 'சுவர்ண புஸ்தக' விருதினைப் பலமுறை வென்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு கவிதையின் வெளிச்சம்"

அந்தகாரத்தைச் சட்டம் என்றெழுதியது
ஊரடங்குச் சட்டம்
கறுப்பு எழுத்துக்களிடையே
ஒரு துளி வெண்மையுமே இன்றி
பத்திரிகைகள் எதற்கு, நண்ப!
கசந்த, கறுப்புத் தாள்களை
செய்தி என்றெழுதியது,
ஊரடங்குச் சட்டம்.

தோழன் என்னையே உன்
எதிரி என்றெழுதியது,
ஊரடங்குச் சட்டம்.
வெளிச்சமெங்கே?
பீதியை அமைதி என்றெழுதியது,
ஊரடங்குச் சட்டம்.
என்றாலும் சகோதரனே,
இதுதான், இதுவேதான் நான் சொல்லும்
கவிதை வெளிச்சம்:
(ஊரடங்குச்) சட்டம் அவர்களுக்கானதெனில்
இருட்டு எங்களுக்கானதல்லவோ?

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி கல்பனா அம்ப்றோஸ்
(Malathi Kalpana Ambrose)

இவர் ஒரு சிங்களக் கவிதாயினி, மொழிபெயர்ப்பாளர், சிறுவர் இலக்கியப் படைப்பாளி. 'மே நிஹன்ட வெரலட்ட என்ன' (இந்த மௌனக் கடற்கரைக்கு வாருங்கள்), 'நொபவதினு வஸ் ப்ரேமயவ பவதிமி' (இல்லாத சொற்களின் காதலாய் நிலைத்துள்ளேன்), 'ஒப கெம்புரு நிந்தக்க' (நீ ஆழ்துயிலில்), 'பியா நொஹெம்பு பியாபத்' (பறக்கவொண்ணாச் சிறகுகள்) என்பவை இவரது கவிதைத் தொகுப்புகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன்

சில கதைகளில் சந்திக்க நேரும்
மலர் மணம்
ஆனால்
சூரியனில் ஒளி இல்லை...

சில கதைகளில் சந்திக்க நேரும்
குண்டூசி முனைகள்
நகக் கீறல்கள்
கழற்றப் படாத அம்புகள்
கழற்றினால் குருதி பெருகி
இறக்கவும் நேரலாம்

மோகன், எப்பேர்ப்பட்ட வீரன் நீ!
வானம் இருமுறை
உச்சிமீது வீழினும்
கால்வாசி மண்ணெண்ணெயளவே
பெறுமானமுள்ள வாழ்வைச் சுமந்து
டோஸரொன்றின் அடியில் வைத்து
நிம்மதியாய் உறங்க நினைத்தாயா, மோகன்?

நிரந்தர வன்மத்தால் எரியுண்ட தேசத்தில்
கரிபடிந்த வாழ்வின்
மௌனச் சிதிலங்களிடையே
நெஞ்சுவெடித்துப் போய்
சொந்தபந்தங்கள் மெல்ல மெல்லச் சாகையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறை சீனியில், நிறை சீனியில்
தேநீரும் கோப்பியும் ஊற்றியூற்றி
சில்லிட்ட இதயங்களுக்கு வெதுவெதுப்பூட்டுவது
அடி மனசில் செத்தும் உயிர்த்துமாய்த் துடிதுடிக்கும்
ஒரு கனவு நட்சத்திரத்தின் ஒளியினாலா?

கடந்த காலம் என்பதெல்லாம்
இருளடைந்ததோர் நீளிரவு மட்டுந்தானா?
அவ்விரவு விடிவதற்கோர் சாத்தியமுண்டா?

நினைவு என்பது
கனவாக மட்டுமேயே இருந்திடாத ஓரிடம்
கனவிருந்து விழித்தெழுதல் சாத்தியமா?

பூங்கொத்தைக் கைநழுவ விடாமல்
அந்தகாரப் பெருந்தெருவில் உலவுதற்கும்
ஒருகணத்துச் சுகந்தம் வேண்டி
பூவிதழை ஒவ்வொன்றாய் உதிர்ப்பதற்கும்

அதன் பின்
முழந்தாள் ஊன்றி எழமுனைகையில்
தலையைப் பற்றி நிலத்திலடிக்கும் வாழ்க்கையை
வாடகைக் கனவொன்றில் பொத்திவைத்து
பூக்கள் மலரும் வரை
காத்திருக்க இயல்கிறது எம்மால்...

●

குறிப்பு: *83 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது மோகன் என்ற தமிழரின் கடை எரியூட்டப்பட்டது. அதன்பின் அங்கும் இங்குமாக அலைந்து கஷ்டப்பட்டு திருத்தி எடுத்த வீடும் நகர அபிவிருத்தித் திட்டத்தினால் கபளீகரம் செய்யப்பட்டு, புல்டோஸரினால் இடித்து நொறுக்கப்பட்டது. அவருக்கான உணர்வுத் தோழமையை வெளிப்படுத்தும் கவிதை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேந்திரன்

தோழமைக்கென்றோர் காற்றின்
சிற்றசைவும் அற்ற ஓரிடத்தினில்
பரவும் நிலவொளியும்
வெறுமையில் வியாபிக்கும்
ஆறும் மீனும் கடலை அடைந்தபின்
வறண்ட கண்ணீரின் தனிமையை அறிவேன் தோழா

கைவிட்டுப் போன உந்தன் சொந்த ஊரில்
முடிவுறாத ஷெல்லடிக் குறிகளின் கீழ்
குழந்தைப் போராளியானாயோ
கல்வியிழந்ததால் பின்தங்கினாயோ

வண்ணங்கள் ஒளிரும் உல்லாசக் கொழும்பு
இரவிலும் ஒளிர்ந்திடும் கிரணத்துள் மூழ்கிடும்
குளிர்ந்த கல்லடி ஆற்றங் கரையினில்
யார்க்குமிலா கண்ணீர் அருவிகொட்டும்.

மீன்கள் பாடும் கானம் கேளாது
பதினெட்டாண்டுகள் எவ்விதம் கழித்தாய்?
நீதியும் மரணமும் செத்த ஓரிரவினில்
கனவிலேனும் வீடு தோன்றிற்றோ?

காலிமுகத்திடல் அலைகள் மீதினில்
தழுவும் காற்றின் மோகனம் மேவும்
உன் ஊமைச் சிறைக்கூட முகட்டின் மேலே
சிங்கமும் நரிகளும் ஒரேகொடியிலே...

குறிப்பு: *(குழந்தைப் போராளி என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு செல்லப்பிள்ளை மகேந்திரன் 18 வருட காலம் விசாரணையின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டு இருந்ததாகச் செய்தி.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரி குமாரகமகே (Kumari Kumaragamage)

இவர் ஒரு சிங்களக் கவிதாயினி, எழுத்தாளர், நாடகக் கலைஞர், சமூகச் செயற்பாட்டாளர். கெட்டிகரப்பு திக கதா (சுருக்கப்பட்ட நீண்ட கதைகள்), கேணு கதா (பெண்களின் கதைகள்), உறைப்புச் சாப்பாடு என்பன இவரது நூல்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“செத்துப்போன நவம்பர் மாதம்”

அது
செத்துப்போனவர்களின் மாதம்
சாகடித்தவர்களின் மாதம்!

வடக்கு தெற்கு கிழக்கு மேற்கெனும்
வேறுபாடுகளுக்கு அப்பால்
சாகடித்தவர்களின் மாதமும்கூட!

ஆணியறையப்பட்டுச் செத்தவர்களாயினும்
ஷெல்லடிபட்டுச் செத்தவர்களாயினும்
குண்டடிபட்டுச் செத்தவர்களாயினும்
கழுத்தறுபட்டுச் செத்தவர்களாயினும்
தாயொருத்தியின் வேதனையில்
வித்தியாசம் இருக்கக்கூடுமோ?
செத்துப் போனது - அவள்
கருவிற் சுமந்த ஜீவனேயல்லவா?
சிந்தியதெல்லாம் அமுதாய் அவளூட்டிய
உதிரமே அல்லவா?

நவம்பரில் ஒப்பாரி வைக்கும்
பெருமழை என்பது
நெஞ்சுவெடிக்குமாப் போலும்
அன்னையரின் சோகம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுச் சின்னம், மெய்க்கீர்த்தி, கிரியைகள்
ஏதுமற்றுப்போன மகன்...
துயில்வதற்கோர் சவப்பெட்டியோ இடுகாடோ
அற்றுப்போன மகன்...
அங்கு
பெருக்கெடுத்தோடிய குருதியில்
வேறுபாடுகள் இருக்கக்கூடுமோ?

சூரியனும் சந்திரனும்
ஒளிர்வது சமமாகத்தான்
உயிர்காக்கும் மூச்சுலாவுவது
ஒரே வானத்தில் தான்
நவம்பரில் அணையுடைத்து
ஹோவென்று ஆர்ப்பரிக்கும்
பெரும் வாவிகள் சொல்கின்றன
அவர்தம் அப்பெருமூச்சின் வலிமையினை!

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பிலிக் கவிதை

"இங்கே பாருங்கள்
... ...
இங்கே இருப்பவர்கள்
அம்மா, மகள்மார் மூவர்
மகன்
... ...
அந்தப் பக்கம் இருப்பவர்
அம்மம்மா
... ..."
"ஐயோ !
இங்கே பாருங்களேன்
இந்த அம்மாவுக்கு ஒரு காலில்லை"
"ஹ்ம்ம்..."

"ஆனாலும், எல்லோரும்
சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்
மிகுந்த மகிழ்வோடு
அது எப்படி?"

"அது அப்படித்தான்
ஒளிப்படம் எடுக்கையில்,
வாழ்ந்திருப்பதை விடவும்
வித்தியாசமாய்க் காட்டிக்கொள்ள
எல்லோருக்கும் ஆசைதானே!"
"அது ஏன்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குமது தெரியாது"

"அப்போ...
ஏனிந்தச் சின்னவன்
கையைச் சற்று மறைத்தபடி..."

"அது ஏன் தெரியுமா?"

... ...
துண்டிக்கப்பட்ட கையைக் காட்ட
அவனுக்கு விருப்பமேயில்லை
அதிலும், ஒளிப்படம் எடுக்கும்போது..."

"ஆஹ்! அப்படியெனில்...
அம்மாவுக்கு வலக் காலில்லை
மகனுக்கு வலக் கையில்லை"

"யுத்தத்தின் இயல்பதுதான்"

"பெண்பிள்ளை மூவரும்
நன்றாக உள்ளனர் தானே?"

"வெளியில் தெரிவதென்னவோ
அப்படித்தான் ஆனாலும்,
இந்தப் பெண்பிள்ளை
குடும்பத்தில் இரண்டாமவள்
எல்லோரிலும் சின்னவளாய்
இதோ தெரிகின்றாளே
அவளின் தலையிலும் உடலெங்கிலும்
எத்தனையோ ஷெல் துண்டுகள்
புதையுண்டு உள்ளனவாம்
அகற்றுவதும் கஷ்டம் தானாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்போ அப்பிள்ளையாலும்
பிரயோசனமில்லை. பரவாயில்லை,
அடுத்திரு பெண்பிள்ளைகளாயினும்
மிஞ்சினார்கள் அல்லவா?
குறைந்தபட்சம் படிக்கவேனும்
முடிகின்றதா அவர்களுக்கு?"

"அதெல்லாம் யாரறிவார்?
கடவுளுக்குத்தான் வெளிச்சம்!
அதையெல்லாம் தேடிப்பார்க்கவும்
எங்களுக்குத் தடை.
கேட்டாலும் தேடினாலுமென்ன
அதனாலெல்லாம் ஏற்படுமா
ஏதேனும் பலனொன்று?"

"அவ்வாறெனில்,
இந்தக் குடும்பத்தின் தந்தைதானெங்கே?
தந்தையுமில்லையா?"

"தந்தையில்லாமலா பிள்ளைகள் பிறக்கும்?
ஆனாலும் இப்போது அவரில்லை
போன இடம் அவருக்கும் தெரியாது"

"அஃ! தகப்பன் இறந்துவிட்டாரா?
காலொன்றில்லாத இவ்விளம் தாயினால்
எப்படிப் பிள்ளைகளைப் பராமரிக்க இயலும்
அதிலும் இந்த இளங்குமரப் பெண்களை?"

"அதெல்லாமும் அந்தக் கடவுளுக்கே வெளிச்சம்!
தெரிந்து கொண்டாலுமே நாமென்னதான் செய்ய?
தேடிப் பார்த்தாலும்
அவர்கள் சொல்லி விட்டாலுமே
ஆகப் போவதென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

… … … … … … … … … … … …
… … … … … … … … … … … …
கடைசிக் காலத்தில் ஒரு மிடறு நீரருந்தக்கூட
பதுங்குகுழி விட்டு
வெளிவரவும் முடியவில்லை
முடியாத கட்டத்தில் வந்தோருக்கெல்லாம்
உயிரிழந்து சாகவே நேர்ந்தது
… … … … … …
… … … … … … … …

இந்தக் குடும்பம் இருந்ததாம்
பதுங்குகுழியில் சுருண்டபடி
தாளவே முடியாத ஒரு தருணத்தில் சொன்னாளாம்,
'அப்பா, உதுகள் பட்டினியில் செத்துடுங்கள்
கஞ்சி கொஞ்சம் காய்ச்சுவோம்'
அப்போதும் ஒரு கொத்து
அரிசி இருந்ததாம் அவர்களிடம்
… … … … … … … … … … … …
ஷெல் விழுந்து நெருப்பெரிந்து
ஓய்ந்துவிட்ட தருணமொன்றில்
அம்மா காய்ச்சினாளாம்
ஒரு பானைக் கஞ்சி
… … … … … …
அவசர அவசரமாய் வெளியேறி
மரத்தடியொன்றைச் சுற்றிக் குந்தி
… … … … … …
… … … … … …

ஒரேயடியாய் நட்டநடுவாந்திரமாய்
வந்து விழுந்ததாம்
வெடித்துச் சிதறியதாம்
சுற்று வட்டாரமெல்லாம்
… … … … … … … … … … … …

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்மா.. அம்மா..
என் கை போச்சுது'
கதறியழுத மகனைப் பார்க்க
எழுகையிலே விழக்கண்டு பார்த்தால்
காலொன்றை இழந்திருந்தாள்
... ...

"ஏய் இஞ்ச பாருங்கோவன்
பையனுக்கொரு கையில்லை
எனக்கோ ஒரு காலுமில்லை
எழும்பியொருக்கா பாருங்கோவன்
பெட்டையவளவை தப்பிட்டாளவையோ
ஐயோ ஒருக்காச் சொல்லுங்கோவன்"

ஒரு பதிலும் கிடைக்கவில்லை
எந்த ஓர் அசைவுமில்லை
அப்போதுதான் தெரிந்ததாம் ஐயோ
அவரினிமேல் இல்லையென்று
... ...
அவர்கள் இங்கே அனாதரவாய்
... ...
... ...
அதிருஷ்டமிருந்தவர்கள் தப்பினர்
கைகால்களை இழந்தேனும்"

"அதுவுமோர் அதிருஷ்டமா என்ன?"

"இறந்துபோகாத எல்லோருமே
அதிருஷ்டமொன்று இருந்தவர்கள்
கை காலொன்றை இழந்திடினும்
கண்ணிரண்டையும் இழந்திடினும்
... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனேகர் அப்படித்தான்
நினைத்துக் கொண்டிருந்தார்கள்
… … … … … …

படாதபாடுபட்டு ஒருவாறு தப்பித்து
ஒளித்துவைக்க எதுவுமின்றி
ஏழுகடல், ஏழுமலை தாண்டி
அடிமேல் அடியெடுத்துத் தவழ்ந்து வந்துமென்ன
உள்ளெரியும் நெருப்பணைக்க
ஆறுதலாய் ஒரு சொற்கேட்க
உள்ளம் துடிதுடித்தும்
தலைவருடி ஆறுதலளிக்க
யாருமே அற்றுப்போனது
எங்கள் விதிதான்...
… … …

அப்போதெல்லாம்
தகரக் கூரையின்கீழ்
தகரச் சுவர்கள் சூழ
கொதிக்கும் சூரியன்கீழ்
உண்டும் உண்ணாமலும்
வாழ்க்கை கழிந்தாலும்..
… … …
ஹ்ம்ம்...

இனி எங்களுக்கெல்லாம்
… … … … … … … … … … … …
இனி... இனியெங்களுக்கெல்லாம்?
என்ன சொல்லப் பார்க்கின்றாய்?
சொல்ல வந்ததைச் சொல்லேன்?

"இல்லை... இங்கிருப்போர் இப்போது
சொல்லாமல் சொல்கின்றார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வராதிருந்திருந்தால்
அங்கேயே அப்படியே
செத்திருந்தாலாவது நல்லதென்று"

"என்னது?
அதென்ன கதை அது?
தாங்க முடியாமலா,
அனுபவிக்க முடியாமலா
செய்வதெல்லாம் போதாதா
சொல்வதெல்லாம் போதாதா
நினைப்பதெல்லாம் போதாதா
எதற்கு?
எவ்வளவு கவனிப்புகள்
விசாரிக்கவும் பார்க்கவுமாய்
எத்தனைபேர் வந்தார்கள்?
கேட்கவும் பேசவுமாய் வராதவர்கள் யாருள்ளார்கள்
... ..."

"கலியாணமொன்று கட்டி
குழந்தைகுட்டி பெற்றெடுத்து
கூலி வேலை தேடிக்கொண்டு
நிலத்திலே காலூன்றி
... ...
கடவுளிடம் மன்றாடி
வருந்துயரைப் பகிர்ந்துகொண்டு
... ...
வறண்ட பூமி
உலர்ந்த காற்று
கொதிக்கும் சூரியன்
காயளவு விழும் மழைத்துளி
மனிதரும் அவ்விதமே
பார்வைக்குக் கரடுமுரடாய்
உள்ளார்ந்து குளிர்மையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையோ கடினமாய்
என்றாலும் அழகுதான்"

"இனி? என்னதான் பிரச்சினை?"

"இனி அவை எல்லாமே
இறந்த கால நினைவுகளாய்...
... ...
ஊரிருந்த இடம் தேடின்
பாழடைந்த காடிருக்கும்
... ...
இவ்வளவு காலமாய்
வாழ்வினைப் பகிர்ந்து கொண்டோர்
இல்லாமலே போயிருப்பர்
கண்ட கனவெல்லாம் உலர்ந்துதிர்ந்து போயின
வாழ்தலுக்கான பற்றுக்கோடுகள்
சிதைந்தழிந்து போயின
அனைத்தையும் பார்த்திருந்த
கடவுளும் கைவிட்டார்"
... ...

"இனி நாமென்ன செய்தல் வேண்டும்?..."

"... ... ...
... ...
இல்லையில்லை எதுவுமில்லை...
எதுவுமே இல்லை... செய்வதற்கு ஏதுமில்லை
சொல்வதற்கும் ஏதுமில்லை
சொல்லியும் பயனேதுமில்லை
... ...
சும்மாதான் உங்களிடம்
ஒளிப்படங்கள் காட்டிக்கொண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனதைத் தேற்றிக்கொள்ள
வேண்டும் போல உணர்ந்ததனால்
அழுவதற்கோர் இடந்தந்தது போதாதென்று
இதற்கு மேலும் நானெதைக் கேட்க?
... ...
... ...
முடிந்தால் இவர்களுக்கும்
அழுவதற்கோர் இடங்கொடுங்கள்
வாழ்வை வெல்வதற்கும்
வலுவொன்றைப் பெறுவதற்கும்
கொடுத்தெடுத்து வாழ்வதற்கும்
உங்களால் முடியுமென்றால்
இடங்கொடுங்கள் அவர்களுக்கு...
... ...
ஹ்ம்ம்ம்...
... ... ”

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசுரு சாமர சோமவீர (Isuru Chamara Somaweera)

இவர் ஒரு சிங்களக் கவிஞர், சிறுகதையாசிரியர், பத்தி எழுத்தாளர், ஊடகவியலாளர். சிங்கள இலக்கிய உலகின் பன்முக ஆளுமையான இசுரு சாமர சோமவீர, 2005 ஆம் ஆண்டு சுத — வெண்மை எனும் தனது முதலாவது கவிதைத் தொகுதி மூலம் இலக்கிய உலகுக்குள் பிரவேசித்தவர். சுத (கவிதைத் தொகுதி — 2005), தாண்டவ — தாண்டவம் — (கவிதைத் தொகுதி— 2009), மலக் கதா கரய் — மலரொன்று பேசும் — (சிறுகதைத் தொகுதி— 2013) அப்ப தெதென மெத மஹ முஹுூத — நம் இருவருக்கிடையில் ஒரு பெருங்கடல் — (கவிதைத் தொகுதி— 2016), கெஹெணு பிரிமி மல் பலத்துரு — ஆண்கள் பெண்கள் மலர்கள் கனிகள் — (சிறுகதைத் தொகுதி— 2019) என்பன இவரது இலக்கியப் படைப்புக்களாகும். "தாண்டவ" (2011) கவிதைத் தொகுதியில் வந்த ஒரு கவிதையின் மொழியாக்கம், இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை இதம்

இன்பமோ துன்பமோ
மழையெனப் பொழிந்து
வெறுமையாகும் ஆகாயம்
இன்றும் முன்னொரு நாளைப் போன்றதே
எந்தவொரு வேறுபாடுமில்லை
நாளையும் இதைப் போலவே
வானம்
அவ்வப்போது பெய்யக்கூடும் மழை
எனைப் போலவே யாவரேனும்
துக்கத்திலோ மகிழ்ச்சியிலோ
துய்க்கக்கூடும் மழையின் இதத்தினை
நாளையும்...

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபுலி நிரோஷினி ஹெட்டியாரராச்சி
(Vipuli Niroshini Hettiarachi)

இவர் ஒரு சிங்களக் கவிதாயினி. சிறுவர் இலக்கியப் படைப்பாளியும்கூட. தனது "நிக்மனக நிமித்தக்" (வெளியேற்றத்தின் சமிக்ஞை) எனும் முதலாவது கவிதைத் தொகுதி மூலம் 1992 ஆம் ஆண்டு சிங்கள இலக்கிய உலகில் பிரவேசித்தார். சுமார் 10 சிறுவர் இலக்கிய நூல்களைத் தந்துள்ள இவர், 2005 ஆம் ஆண்டு சிறந்த சிறுவர் இலக்கியப் படைப்புக்கான அரச சாகித்திய விருதைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வேலை வெற்றிடம்

தேடியெடுக்க முடியுமா உடனே
ரகசியக் களஞ்சிய அறையொன்றின்
பூட்டும் சாவியும்?

சொல்லித்தர முடியுமா
தனிமையின் விஷம் முறிக்கும்
அமிழ்தம் பற்றி?

பொறுத்துத் தாளவும் முடியுமா
பிரியும் இதயத்தின் ரணங்களை?

இந்தப் பெருவெளியின் இடைவெளியை
சிற்றிடத்தால் நிரப்பிடத்தான்
இயன்றிடுமா?

வளமான அர்த்தப்பாடுடையனவா
வார்த்தைகள்?

புத்தம் புதிதாய்
ஒரே ஒரு கவிதைதானும்
எழுதப்பட்டிருக்கிறதா?

... ...

நீ மிக அவசரமாய்த் தேவைப்பட்டிருக்கிறாய்
ஒரு புதிய
கவிதைப் பக்கத்துக்காய்...

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதியா அஞ்சுமன் (Nadia Anjuman)

ஆப்கானியக் கவிதாயினியான நாதியா 2005 ஆம் ஆண்டில் தனது 25 ஆவது வயதில் Gol-e Dudi (கருமலர்) எனும் முதலாவது கவிதைத் தொகுதியை வெளியிட்டார். கஸல் வடிவில் அமைந்த இவரது கவிதைகள் மிகுந்த உயிர்ப்பும் உணர்வெழுச்சியும் கொண்டவை. நினைவு தெரிந்த நாளிலிருந்து கவிதையைக் காதலிப்பதாய்ச் சொன்ன அவர், அந்தக் கவிதைகளுக்காகவே தன் கணவராலும் குடும்பத்தினராலும் அடித்துக் கொல்லப்பட்டார் என்பது எவ்வளவு அதிர்ச்சி தரக்கூடியது! தாலிபானிய ஆட்சிக் காலத்தில் தன் நெருங்கிய நண்பர்களின் உதவியுடன் கவிதைகள் எழுதுவதை ரகசியமாகத் தொடர்ந்த நாதியா, தனது நாட்டில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், குறிப்பாகப் பெண்களின் துயரங்களைப் பற்றியும் தன் கவிதைகளின் வழியே குரல் எழுப்பிய வீரப்பெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகைக்குக் குரலில்லை

மழையின்
பச்சைநிறக் காலடிகளின் ஒலி
அவர்கள் தெருவிலிருந்து உள்ளே வருகிறார்கள்
இப்போது பாலைவனத்திலிருந்து
தாகித்த ஆன்மாக்கள் புழுதிபடிந்த பாவாடைகள்
அவர்களின் மூச்சு எரிகிறது
கானலில் கலக்கிறது
தூசு படிந்து தொண்டை வறள்கிறது
இப்போது அவர்கள்
தெருவிலிருந்து உள்ளே வருகிறார்கள்
வலியுழல்வதற்காகவே கொண்டுவரப்பட்டு
வதைக்கப்பட்ட சிறுபெண்ணுடல்கள்
அவர்களின் முகங்களில் இருந்து
மகிழ்ச்சி பிடுங்கியெறியப்பட்டுள்ளது

கீறல் விழுந்து, சிதைந்து
இதயங்கள் பழசுபட்டுள்ளன
அவர்களின் உதடுகள்
இருளடர்ந்த கடல்களாயின
சிறு புன்னகைகூட மின்னவில்லை
அவர்களின் கண்கள்
வறண்டுபோன ஆற்றுப்படுகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு துளிக்கண்ணீரும் சுரக்கவில்லை
மேகங்களைத் தழுவும்
அவர்களின் குரலற்ற அழுகைகள்
சுவனப் பொக்கிஷங்களாகுமா?
ஓ இறைவா!
எனக்கு அறியத்தருவாயா?
●

ஆங்கிலத்தில்: Zuzanna Olszewska & Belgheis Alavi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸபா கிடானே (Saba Kidane)

எரித்ரிய நாட்டுக் கவிதாயினியாகிய இவர், நாடகக் கலைஞராகவும் ஊடகவியலாளராகவும் மட்டுமன்றி எரித்ரிய மக்கள் விடுதலை முன்னணியிலும் இணைந்து பணியாற்றியவராவார். இவரது கவிதைகளின் பிரதான பாடுபொருள்களாகப் போரும் அதுசார்ந்த நிகழ்வுகளுமே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரும் பெண்ணும்

போரும் ஒரு பெண்ணும்
நான் பாடுகிறேன்
ஒரு தேசத்திற்கு
அமைதியைக் கண்டுபிடிக்க
பெண்தேவை

அச்சத்தை வென்று மீளவும்
போரை வெற்றிகொள்ளவும்
இன்னும், அமைதியைப் பாதுகாத்துக்கொள்ளவும்
பெண்ணால் மட்டுமே
போதுமான தியாகங்களைச் செய்ய முடியும்.

எதற்கும் தயாராக
தன்னையே அர்ப்பணிக்கிறாள்
உயிர்களைப் பெற்றெடுக்கிறாள்
குட்டிகளை நாவால் வருடிக்கொடுக்கும்
சிங்கம் போன்று,
இதமாய்த் தொடர்பவள்
குட்டிகள் அவள் அன்பினில் வளரும்
என்றாலும்
சமாதானத்தின் கோரிக்கைகள்
மேலும் எதிர்பார்க்கின்றன
குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக
பதுங்குகுழிகளை நோக்கி
அவளை மீளவும் அழைக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உணர்வின் ஆர்வத்தை
இதற்குமேலும் அவளால்
நிராகரிக்க முடியாது
சோர்வடைந்திருப்பதை
தாகித்திருப்பதை
பசியில் பட்டினி கிடப்பதை
ஏன், வலியையோ சாவையோ பற்றிக்கூட
சிந்திக்க முடியாது.

மாறாக, ஆழ உள்ளிழுத்த மூச்சில்
வீரியம் கொள்கிறாள்
சக போராளிகளோடு இணைந்திட ஓடுகையில்
அதிர்கிறது அவளின் நெஞ்சகம்
அணிவகுப்பில் இணைகிறாள்
அவளுடைய அணிவகுப்பு
சமாதானத்துக்கானது மாத்திரமே.

●

ஆங்கிலத்தில்: Charles Cantalupo & Ghirmai Negash

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஹுர் தவக்குலி (Bahar Tavakoli)

ஈரானியக் கவிதாயினியான இவர், பெர்ஷியக் கவிதைக் கழகத்தின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமை

அதன் கைகளைத் தழுவுகையில்
எனக்குக் குளிராயிருக்கிறது
எனது தாயினது மனம் போல்,
அதன் இதயம் துயரார்ந்திருக்கிறது
துக்கத்தைப் பகிர்ந்துகொள்ள
யாரும் அதனுடன் இல்லை
அதன் கதைகளை உற்றுக்கவனிக்கையில்
வெளியெங்கும் உறைந்துபோவதை
உணர்கிறேன்
ஓர் இளம்பெண், வெண்ணிற ஆடையில்
புகுந்த வீட்டுக்கு அனுப்பப்படுவது பற்றி
அது கவலைப்பட்டவாறு உள்ளது.

இப்போது
தொலைவிலிருக்கும் ஒரு வீட்டில்
வெறுமையாய் நின்றிருக்கிறது
நானங்கு சென்றபோதும்
வித்தியாசமெதுவும் ஏற்படவேயில்லை
பாவம்! இந்தப் பழைய குளிர்சாதனப் பெட்டி
பல வருடங்களாக
ஒரு சமையலறை மூலையில் கிடக்கிறது
குளிருடனும் கவலைகளுடனும்
துயரங்களைத் தவிர
உண்பதற்கு ஏதுமின்றி.

●

ஆங்கிலத்தில்: Abol Froushan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாப்லோ சபொரியோ (PABLO SABORÍO)

கொஸ்டா ரிகாவில் பிறந்து வளர்ந்த இவர், அமெரிக்கா, ஸ்வீடன், ஜேர்மன் முதலான பல நாடுகளில் வாழ்ந்தவர். தற்போது டென்மார்க்கில் வசித்து வருகிறார். சிறு வயது முதலே கலகச் சிந்தனை கொண்டவராக வளர்ந்த இவர், ஒரு கவிஞரும் ஓவியக் கலைஞருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலப்பெயர்வுகள்

அவை எப்படி சிந்தனையில் ஆழ்ந்திறங்கின
- அன்னப்பறவைகள் -
யாருக்கும் தெரியாது
காற்றில் அலைவுறும் ஒரு பட்டம் போல
எப்படி தர்க்கத்தினூடே எதிரொலித்தன
சின்னஞ்சிறுமிகளைப் போல
தமது கைகளால், இறக்கைகளை
கணக்கற்ற தடவைகள்
அவை கோதிக் கொண்டன

இந்த அன்னப்பறவைகள்
பணி குறித்த பிரக்ஞை கொண்டவை
என்றாலும்
தம் பனியடர்ந்த மேலங்கிகளின்
கறையெனப் படிந்த பாவம் சுமந்த
சிக்கலான உயிரிகள்
யாருக்குத் தெரியும்,
அவை நரம்புகளை நடுங்கச் செய்யும்
பொய்கைக்கு திரும்பிச் செல்லவும் கூடும்
இப்போதைக்கு அவை
சிக்கித் தவித்துக் கிடக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு செய்மதியைப் போல
ஒரு மணித் துளிநேரம்
சொல்லிடுக்குகளின் நடுவே
அவை உறங்குகையில்
எந்நேரமும் அவற்றை
உற்றுக் கவனிப்பதை ஏற்பதில்
எனக்குச் சங்கடமாக இருக்கிறது.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோலா கௌந்தகிஜியன் (R. H. Lola Koundakjian)

1979 ஆம் ஆண்டுமுதல் அமெரிக்காவில் வாழும் ஆர்மேனியக் கவிதாயினியான இவர், ஆர்மீனிய அமெரிக்கக் காலாண்டிதழான அராரத் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிவரும் ஊடகவியலாளரும் சமூகச் செயற்பாட்டாளருமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை

மிக மெல்லியதாக
அவள் வெங்காயங்களை
அழகாக அரிகிறாள்
ஒரு கட்டிடத் தொழிலாளி, வயது 25
கீழே வீழ்ந்து இறக்கிறான்

கொத்தமல்லி, லவங்கம், இஞ்சி
சேர்க்கிறாள்
ஒரு படைவீரன், வயது 21
வெடிகுண்டு புதையுண்ட
பாதையைக் கடக்கிறான்.

குளிர்சாதனப் பெட்டியிலிருந்து
அவள் இறைச்சி உருண்டைகளை
வெளியிலே எடுக்கிறாள்
ஓர் ஊடகவியலாளன், வயது 43,
தலையில் சுடப்பட்டு இறக்கிறான்.

அடுப்பின் குறைந்த சுவாலையில்
பாத்திரத்தில் சில கண்ணீர்த்துளிகளைச் சேர்த்து
சுவைச் சாற்றினைக் கலக்குகிறாள்

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியம் ஆலா அம்ஜாதி (Maryam Ala Amjadi)

மரியம் ஆலா ஓர் ஈரானியக் கவிதாயினி, மொழிபெயர்ப்பாளர், கட்டுரையாளர், ஊடகவியலாளர். இவர் பல வருட காலம் இந்தியாவில் வாழ்ந்திருக்கிறார். 2011 ஆம் ஆண்டில் சீனாவில் இடம்பெற்ற முதலாவது கவிதைப் பெருவிழாவில் இளந்தலைமுறைக் கவிஞருக்கான விருதைப் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவக் கொலை செய்யப்பட்ட பெண்களுக்காக

அவர்களது உள்ளங்களின் எதிர்பார்ப்புகளை
இறுகச் செய்யுமாறு
நான் மென்மையாகச் சிரிக்க மாட்டேன்
இவ்வுடலின் வரைபடத்தை மறைக்க மாட்டேன்
எனவே, என் எல்லைகளின் விடுதலைமீது
அவர்களால் நடக்க முடியுமாய் இருக்கும்
அவமானப்படுத்தலுக்கு அஞ்சி
நான் நீள் பாவாடை அணிய மாட்டேன்
அது அவர்களின் பார்வையைத் தடுக்கிக்
குறுகச் செய்யும்
அவர்கள் பாராதிருக்கும் பொருட்டு
என் சிந்தனைகளின் அரங்கினை,
என் குரலின் திரைகளை விலக்க மாட்டேன்
என் நீண்ட கால்களின் அடைப்புக்குறியை
நான் மூட மாட்டேன்
என் பார்வையின்
எதிர்மறையான தீப்பிழம்புகளை அணைக்கமாட்டேன்
ஆண்களின் பிரக்ஞையின்மைக்குப் பின்னே
நான் நடக்கவோ அமரவோ நிற்கவோ மாட்டேன்
என் கண்ணின் சுர்மா ஒளியைக்
குறைக்க மாட்டேன்
என் அழுத்தமான உதட்டுச் சாயத்தைத்
துடைக்க மாட்டேன்
முன்னர் மட்டுமல்ல இப்போதும்
அவர்களின் ஈகோவின் கருக்களை
நான் சுமக்க மாட்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அறுத்தெறியும் காதல் முடிச்சுகளுக்காய்
தூக்கமிழக்க மாட்டேன்
உங்கள் எல்லோரின் பெயராலான கௌரவங்களுக்காய்
இவை எவற்றையும் நான் செய்யவே மாட்டேன்
நானிதைச் சத்தியம் செய்கின்றேன்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒக்டோவியா பாஸ் லொஸானோ (Octavio Paz Lozano)

இவர் ஒரு புகழ்பூத்த மெக்ஸிகன் கவிஞர். இந்தியா உள்ளிட்ட நாடுகளில் மெக்ஸிகோவுக்கான தூதுவராகவும் பணியாற்றியுள்ளார். 1980 ஆம் ஆண்டு ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் இலக்கியத்துக்கான கௌரவக் கலாநிதிப் பட்டம் கிடைக்கப்பெற்ற ஒக்டோவியா, தனது கவிதை ஆக்கங்களுக்காகப் பல்வேறு விருதுகளை வென்றதோடு, 1990 ஆம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபள் பரிசையும் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரு

இங்கே ஒரு நீண்ட மௌனத் தெரு உள்ளது
நான் இருட்டில் நடக்கிறேன்
தடுமாறி விழுந்து பின் எழுந்து
குருட்டுக் கால்களால் நடக்கின்றேன்
என் கால்களில் கற்களும் சருகுகளும்
மிதிபடுகின்றன
கற்களையும் காய்ந்த இலைகளையும்
எனக்குப் பின்னால் யாரோ ஒருவர் மிதிக்கிறார்
நான் தாமதிக்கையில் அவரும் தாமதிக்கிறார்
நான் ஓடுகையில்... அவரும்...
நான் திரும்பிப் பார்க்கையில்
யாருமேயில்லை...
எல்லாமும் இருளில்.. கதவுகளின்றி
என் காலடிகள் மட்டுமே என்னையறியும்
மூலைமுடுக்கில் நான் திரும்புகிறேன்
மீண்டும் மீண்டும்
அவை தெருவை நோக்கியே என்னைச் செலுத்துகின்றன
என்றென்றைக்குமாய்
அங்கே யாரும் எனக்காகக் காத்திருக்கவில்லை
என்னை எவரும் பின்தொடரவுமில்லை
தடுமாறி விழுந்து எழுந்து,
என்னைக் கண்டதும் பேசும்
தடுமாறும் ஒரு மனிதனைத் பின் தொடர்கின்றேன்
அங்கே யாருமில்லை.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிஹான் உமர் (Gihan Omar)

இவர் எகிப்தைச் சேர்ந்த கவிதாயினி. கெய்ரோ பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறையில் கற்கையை மேற்கொண்ட இவர் Light Feet எனும் தனது முதலாவது கவிதைத் தொகுதியை 2005 ஆம் ஆண்டு வெளியிட்டார். கவிதைச் செல்நெறியைப் பொறுத்தவரையில் தன்னை எல்லா நூற்றாண்டுக்கும் உரியவராக அழைத்துக்கொள்ள விரும்புபவராகத் தன்னை அடையாளப்படுத்தும் இவரது அதிகமான கவிதைகள் பெண்ணியத்தை மையமாகக் கொண்டு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஒரு முழுமையான பூவனமல்ல

என் முகத்தில் தேனீக்கள் ஓய்வெடுக்க
ஒரு பூவைப்போல அனுமதிக்கிறேன்.
கூட்டமாக என் கன்னத்தில் மொய்க்கும்
அவற்றின் பரபரப்பான கால்களை
நான் கிளர்ச்சியோடு உணர்கிறேன்.
இந்தத் தருணத்தை மட்டுமே
அமைதியாகக் கொண்டாட,
எந்தக் கட்டளைகளையும் தவிர்க்கும்படி
உடலை ஒப்புக்கொடுக்கிறேன்.
நான் கவனிக்கிறேன்
அவை, என் கழுத்துவரை ஊர்ந்து செல்கின்றன
கொட்டிக் கொட்டி என் அமிர்தத்தை
கனிவுடன் உறுஞ்சுகின்றன
அவற்றின் வன்முறை வேட்கைகளின் பின்னால்
நான் ஒளிந்து கொள்கிறேன்
இப்போது என் கண்களை விரும்புகிறேன்
தேனீக்களின் இயக்கங்கள்
எனது இருப்பை உறுதிப்படுத்துகின்றன
அவற்றின் வருகையை மேலும் காண
ஏக்கங்கள் என்னை அனுமதிக்கின்றன
தேனீக்கள் தைரியமானவை
என் முலைகளுக்கிடையிலுள்ள
ஒரு குறுகிய பாதையில் சறுக்கிச் செல்கின்றன

இந்த இரவில்,
சமையலறைக்குள் பதுங்கிச் செல்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்து வைத்திருந்த பெருமையுடன்
தேன் கிண்ணத்தைத் திறந்து
ஒரு தேக்கரண்டியில் நிரப்பி
சுயமாகச் சுவைக்கத் தொடங்கினேன்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட நடவடிக்கைகள்

ஒரு கல் போன்று அமைதியாக விழுகிறேன்
ஒரு நீர்வீழ்ச்சி போன்று இரைகிறேன்
அவதூறால் நான் சிதைக்கப்பட்டிருக்கிறேன்
நான் விரும்பும் மேகங்களுடன் பேசுகிறேன்

ஆமைபோன்று உடலினுள்
என் தலையை இழுக்கிறேன்
எறும்பு போன்று சுருங்குகிறேன்
ஒரு தீக்கோழி போன்று மணலிடம் கிசுகிசுக்கிறேன்
பாவமான உறவுகள் மூலம்
அலைகளுடன் என்னை நானே தூய்மைப்படுத்துகிறேன்

நினைவை இழந்த புறாவைப் போன்று
என் தாயின் கல்லறையில் அமர்கிறேன்.

ஒரு குழந்தையைப் போன்று,
அதிகமாய்க் கேட்கிறேன்
யாரோ மனந்திரும்புவது போன்று
இருப்பதைக் கொண்டு திருப்தியடைகிறேன்
பச்சோந்தி போன்று நிறத்தை மாற்றுகிறேன்
ஒரு காமுகியைப் போன்று கலகம் செய்கிறேன்
குழப்பத்தில் பூனையைப்போன்று தஞ்சம் அடைகிறேன்
ஓர் ஆணைப் போன்று முடிவுகளை எடுக்கிறேன்
ஒரு துறவியைப் போன்று
உண்பதை நிறுத்துகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நடனக்காரியைப் போன்று
என் ஆடைகளை அவிழ்க்கிறேன்

பட்டாம்பூச்சியின் சிறகுகள்
என் கையில் நசிவதால் அழுகிறேன்
இலக்கில்லாமல் மலையில் ஏறுகிறேன்
பயந்த மானைப் போல் ஓடுகிறேன்
ஓய்வில் ஒரு சிங்கமாய் நிற்கிறேன்

நோக்கத்தை வெளிப்படுத்த விடாமல்
நான் கவிதையை முடிக்கிறேன்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில்

சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி
கடலை வெறித்துப் பார்க்கும்
ஒரு பெண்ணை மட்டுமே
கடற்கரையில் கண்டேன்.
அந்த இடத்தில் நான் அறையப்பட்டேன்
சக்கர நாற்காலி மணலில் நடப்பட்ட காட்சி
விசித்திரமாகத் தெரிந்தது
எல்லாவற்றுக்குமிடையே,
சுதந்திரத்தைப் பரிந்துரைக்கும் திறந்தவெளி.
இயலாமையை நினைவூட்டலாம் என்று
அவளெதிரில் நிற்கப் பயந்தேன்
கடலலையில் கால் நனைப்பவர்களை
அவள் வெறுக்கக்கூடும் என்பதால்
நானும் கால் நனைக்க விரும்பவில்லை.
அதனால், எனது கால்களை மணலில் நட்டு
எனைக் கண்டுகொள்ள முடியாத
பாதுகாப்பான தூரத்திலிருந்து பார்த்தபடி
திருப்தியடைந்தேன்.

சில கணங்கள் கழித்து
அந்தப் பெண் எழுந்து நின்றாள்
சக்கர நாற்காலியிலிருந்து விலகி
சில எட்டுக்களை வைத்து நடந்தாள்
அவள்தன் சொந்தக் காலில் உறுதியாய் நின்று
எனது கவிதையைச் சிதைத்து விட்டாள்.

●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மீது கட்டவிழ்த்து விடப்படும் அனைத்து விதமான அடக்குமுறைகளையும் தாண்டிப் பல பெண் குரல்கள் வீரியமாய் மேலெழவே செய்கின்றன என்பதை இத்தொகுதியில் உள்ள பல கவிதைகளினூடே நாம் அறியலாம். அவ்வகையில் ஆண்கள் வீட்டுக்கு வெளியே உள்ள அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் போது, அவர்களின் காலம் வீட்டுக்கு வெளியே கழியும் போது ஒரு பெண் தனது சமைலறையில் செய்யும் அனைத்து வேலைகளும் அதற்கு நிகரானவைதான் என்ற புதிய குரலை முன்வைக்கும் பெண் கவியையும், கௌரவக் கொலையை எதிர்க்கும் கவிதையினூடாகச் சமூக, கலாச்சார வன்முறைகளைக் கட்டுடைக்கின்ற, அவற்றை கேலி செய்கின்ற, அவற்றுக்கு அடிபணிந்து போகாது விலகிச் செல்லும் துணிச்சலை வெளிப்படுத்தும் கவிதைக் குரல்கள் இவை.

அட்டை Firelei Báez
விலை ரூ.*120/-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org